பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 4 வெள்ளிக்கிழமை (20-09-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:297

# கிளிநொச்சியில் நேற்றுமாலை வான்-பஸ் மோதி விபத்து!

## நாவாந்துறை சிறுவன் தலைசிதறிப் பலி!!

கிளிநொச்சி,செப்.20

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்றுகொண்டிருந்த 'ஹைஏஸ்' வான் ஒன்றும் பயணிகள் பஸ் ஒன்றும் நேற்று மாலை கிளிநொச்சிப் பகுதியில் மோதி விபத்துக்குள்ளான தில் சிறுவன் ஒருவன் தலைசிதறிப் பலியா னான்.

கண்டி வீதியில் - முறிகண்டிப் பகுதியில் - கொக்காவில் 18ஆம் கட்டையில் - இந்த விபத்து நேர்ந்தது.

நாவாந்துறை வடக்கில் இருந்து மூன்று சிறுவர்கள் உட்பட பதினொரு பயணிகளுடன் கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த 'ஹைஏஸ்' வானுடன், யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த பஸ் ஒன்று கட்டுப் பாட்டை மீறி மோதியதாகக் கூறப் படுகிறது.

வானில் பயணஞ்செய்த துரை ஸ்ரோபன் (வயது5-நாவாந்துறை வடக்கு) என்ற சிறுவனே சம்பவம் நடந்த இடத்தில் உயிரிழந்தான்.

காயமடைந்த அவரது தாயான துரை மரியராணி(வயது42) என்பவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டிருக்கிறார். இச்சம்பவம் தொடர் பாக காவல்துறையினர் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-3)

வடக்கு - கிழக்குப் பகுதிகளில்

# கட்டுமானப் பணிக்கு உதவ சீனா தயார்!

கிளிநொச்சி,செப்.20

வடக்கு - கிழக்கில் போரினால் அழிந்துபோயுள்ள பிரதேசத்தைப் புனரமைக்கும் கட்டுமானத்துக்கு சீனா உதவத் தயாராக இருக்கின்றது என்று சீன நாட்டுத்தூதர் ஜோன் குவாங் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிக்கு நேற்று வருகை தந்த அவர், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தூதரகச் செயலாளர் யூ மற்றும் திட்டக்குழுவினருடன் வருகைதந்த அவர் தமிழ்ச்செல்வனுடன் பல மணி நேரம் கலந்துரையாடினார்.

தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு சீனா வின் முழு ஆதரவு உள்ளதென்றும்-

சமாதான முயற்சிகள் நிச்சயம் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை சீனா வுக்கு உண்டு என்றும் -

தூதர், தமிழ்ச்செல்வனிடம் தெரி வித்தார். (ஐ-3)

# தாய்லாந்துப் பேச்சு வெற்றி குறித்து அமெரிக்காவில் பிரதமர் உற்சாகம்!

## ஐ.நா.பொதுச்சபையில் விவரம் தெரிவித்தார் உலக நாடுகளிடம் நிதி உதவிக் கோரிக்கை

நியூயோர்க்,செப்ரெம்பர்20

**அரசுக்கும் புலிகளுக்கும் இடையே தாய்லாந்தில் கடந்த 16 முதல் 18 வரை நடந்த முதல் சுற்றுப் பேச்சின் வெற்றிகுறித்து தகவல் அறிந்ததும் தற்போது அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெரும் மகிழ்ச்சியும் உற்சாகமும் அடைந்தார். பேச்சின் வெற்றி விவரங்களை அவர் தமது ஐக்கிய நாடுகள் சபை உரையில் குறிப்பிட்டார்.**

**போரினால் உருக்குலைந்து போயிருக்கும் வடக்கு - கிழக்கு மாகாணங்களைக் கட்டி எழுப்புவதற்கும் மக்கள் நலன் குறித்த பணிகளைத் துரிதகதியில் மேற்கொள்வதற்கும் உலக நாடுகளின் உதவியைப் பிரதமர் கோரினார்.**

பிளவுபட்ட - காயமடைந்த - ஒரு சமூகத்தைக் குணமாக்கும் செயற்பாட்டில் அபிவிருத்தி ஓர் அங்கமாகும். மக்களை நாளாந்தம் நெருக்கும் பிரச்சினைகளுக்கு துரிதமான தீர்வுகள் தேவை. அரசியல் சமரசங்களில் ஏற்பட்டிருக்கும் முக்கியத்துவம் தொடர்ந்து பேணப்படுவதில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்தி ஒரு தீர்க்கமான காரணியாகும். சமாதானச் செயற்பாடுகளின் பலாபலங்

(13 ஆம் பக்கம் பார்க்க)



ஐ.நா.பொதுச் செயலாளர் கோபி அனானுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

## 25 இந்திய மீன்பிடிப் படகுகள் பேசாலையில் தடுத்துவைப்பு

மன்னார்,செப்.20

இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன் பிடித்த 25 இந்திய மீன்பிடிப்படகுகள் கைப்பற்றப்பட்டிருக் கின்றன.

பேசாலைக் கூட்டுறவுச் சங்க மீன வர்கள் இப்படகுகளைக் கைப்பற்றி அவற்றிலிருந்த 103 இந்திய மீனவர்க ளைப் பொலீஸாரிடம் ஒப்படைத்திருக் கின்றனர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு பேசா லைக் கடலுக்கு மீன்பிடிக்கவந்த இந் திய மீன்பிடிப் படகுகளே கைப்பற்றப் பட்டிருக்கின்றன.

அந்த இடத்திற்குச் சென்ற மன்னார் அரச அதிபர் வே.விஸ்வலிங்கம், இவ் விடயத்தில் தலையிட்டு இந்திய மீன வர்களைப் பொலஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்தார்.

இந்திய மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடிப்பை ஆட்சேபித்தே தாங்கள் அவர்களைத் தடுத்து வைத்திருப்ப தாக பேசாலை மீனவர்கள் கூறுகின் றார்கள். (ஐ-12)

## ஒத்திவைத்த கைதிகள் பரிமாற்றம் 25 ஆம் திகதி வன்னியில் நடைபெறும்

கொழும்பு,செப்.20

இலங்கை அரசாங்கத்துக்கும் விடு தலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தக் கைதிகள் பரிமாற்றம் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறும். இதற்கான இணக்கத்தை இரண்டு தரப்பினரும் கண்டுள்ளனர்.

யுத்தக் கைதிகளைப் பரிமாறிக் கொள்ள இரண்டு தரப்பினரும் முன்னர் திட்டமிட்டிருந்தனர் என்பது தெரிந்ததே. ஆயினும்; நடைமுறைச் சிக்கல்கள் காரணமாகக் கைதிகள் பரிமாற்றம் பிற்போடப்பட்டது.

புலிகள் இயக்கம் தம்வசமுள்ள 7 படையினரை விடுவிப்பதற்குப் பதிலாக 23 புலி உறுப்பினர்களை விடு விக்குமாறு முன்னர் கோரியிருந்தது. அரசு இதற்கு இணங்கிய போதிலும் சட்டப் பிரச்சினைகள் காரணமாக அவர்களில் சிலரை விடுவிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இப்பொழுது 13 புலி உறுப்பினர் களை விடுவிக்க அரசு முன்வந்திருக் கிறது.

கைதிகள் பரிமாற்றம் எதிர்வரும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## 19ஆவது திருத்தம் சபையில் சமர்ப்பிப்பு

அரசமைப்புச் சட்டத்துக்கான 19 ஆவது திருத்தச் சட்டமூலம் நேற்று பிற்பகல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்பட்டது.

நீதி, சட்டச் சீர்திருத்த, புத்தசாசன அமைச்சரும் சபை முதல்வருமான டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார பிற்ப கல் 3.15மணியளவில் இச்சட்டமூலத் தைச் சமர்ப்பித்தார். (ஐ).

# உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளை இராணுவம் மக்களுக்கு விடுவிக்கும்

## தளபதி பலகல்ல சந்தேசியவுக்கு பேட்டி

லண்டன்,செப்.20

உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர அனுமதிப் பதில் பாதுகாப்பு தொடர்பான சில பிரச்சினைகள் உள்ளன. எனினும், இந் தப் பிரதேசங்களை படையினர் படிப படியாக மக்களுக்கு விடுவிப்பர்.

இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல மேற்கண் டவாறு தெரிவித்தார்.

பி.பி.ஸியின் சிங்கள சேவையான சந்தேசியவுக்கு தளபதி பலகல்ல நேற் றுப் பேட்டி அளித்தார். அப்பேட்டியில் அவர் கூறியதாவது:-

தாய்லாந்தில் எடுக்கப்பட்ட முடிவு கள், தீர்மானங்கள் சரியானவை. அரசு சரியான பாதையில்தான் செல்கிறது என்பதில் இராணுவம் நம்பிக்கை கொண்டுள்ளது.

கண்ணிவெடி அகற்றும் நடவடிக் கைகள் பூர்த்தியாகும் போது பொது மக்களின் இடங்களை விடுவிப்போம். தனங்களப்பில் மூவாயிரம் ஏக்கர்



நிலப்பரப்பு, மக்கள் விவசாயத்தில் ஈடுபடுவதற்காக எம்மால் விடுவிக்கப் பட்டுள்ளது. தொடர்ந்தும் உயர் பாது காப்பு வலயப் பகுதிகளும் எம்மால் விடுவிக்கப்படும்.

உயர் பாதுகாப்பு வலயம் தொடர் பான பிரச்சினைகளை படையினர் - புலிகள் அடங்கிய கூட்டுக்குழுவின் மூலம் தெளிவுபடுத்தமுடியும்.

உயர் பாதுகாப்பு வலயப் பிரதே சங்களில் இருந்து இராணுவத்தை வெளியேற்றி மக்களுக்கு காணிகளை வழங்க நாம் தயார். ஆனால்; இரண்டு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி யுள்ளது.

கண்ணிவெடி அகற்றப்படாமல் இருக்கும் இடங்களில் மக்களை அனு மதிப்பது -

பாதுகாப்பு சம்பந்தமான பிரச்சி னைகள் -

இந்தப் பிரச்சினைகளை நாம் விளக்கும்போது யுத்தநிறுத்தக் கண் காணிப்பாளர்கள் விளங்கிக்கொள் வார்கள்.

1980களில் இராணுவத்துடன் போரிட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.பி.டி.பி, புளொட் போன்றன அரசாங்கத்துடன் இணைந்து அரசியலில் ஈடுபட்டது போல புலிகளும் அரசியலில் இணை யும்போது எமக்கும் அவர்களுக்கும் இடையில் எவ்விதத்திலும் பகைமை உணர்வு தோன்றாது. மேலதிக புரிந் துணர்வுடன் எம்மால் ஒத்துழைக்க முடியும்.

- என்றார் தளபதி பலகல்ல.

## திருத்தப் பிரேரணைக்கு மங்களவும் ஆதரவு

கொழும்பு,செப்.20

ஜனாதிபதியின் அதிகாரத்தை வெட்டும் 19 ஆவது அரசமைப்புத் திருத்தப் பிரேரணையை ஆதரிக்கப் போவதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான மங்கள சமரவீர நேற்று தெரி வித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இந்தத் திருத்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட் டதை அடுத்து நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசு கையில் அவர் இப்படிக் கூறினார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு

## யாழ். கிரிக்கெட் வீரர்களுக்கு ஆஸி. பயிற்றுநர்கள் பயிற்சி

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்.மாவட்ட கிரிக்கெட் வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக ஆஸ்திரேலிய கிரிக்கெட் பயிற்றுநர்கள் குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வருகின்றது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் பயிற்றுநர்களான ஜோன் டுஷானன், டிக் நிக்கல்ஷன் ஆகியோர் கொண்ட குழுவே இன்று வருகின்றது. இவர்களுடன் கொழும்பில் உள்ள ஆஸ்திரேலிய தூதரக அதிகாரியான வில்நன்கேரிஸ் என்பவரும் வருகின்றார்.

யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறும் பயிற்சி வகுப்பில் 16 பாடசாலைகளைச் சேர்ந்த வீர்கள் பங்குபற்றுவா.

17, 18 வயதுக்கு உட்பட்ட வீரர்களுக்கான பயிற்சி பிற்பகல் 2மணிக்கும் -

15, 16 வயதுக்கு உட்பட்ட வீரர்களுக்கான பயிற்சி முற்பகல் 11மணிக்கும் -

இடம்பெறவிருக்கின்றன.

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம், ஐ.நா.சிறுவர் பாதுகாப்பு நிதியம், கல்வித்திணைக்களம் ஆகியன இணைந்து இந்தப் பயிற்சியை ஏற்பாடு செய்துள்ளன. (ஐ-3-ரி)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.20

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிமுதல் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

18 வயதுப் பிரிவு

- மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்.
- இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி. (ஐ-ரி-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் பாஷையூர் சென். அன்ரனீஸ் மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

- பிற்பகல் 4 மணி - சென். அன்ரனீஸ் வி.க. 'பி' அணி எதிர் கலைவாணி வி.க. அணி.
- பிற்பகல் 5.15 மணி - சென் மேரிஸ் வி.க. அணி எதிர் பாரதி வி.க. அணி. (ஐ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ் பல்கலைக்கழக உடற்கல்வி மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக ஆடுகளத்தில் இடம்பெற்று வரும் ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

- காலை 7.30 மணி -யாழ். பல்கலைக்கழக அணி எதிர் கோப்பாய் ஐ.வி.க. அணி.
- காலை 8.30 மணி - சிங்கிள் ஸ்ரார் வி.க. அணி எதிர் கிறாஸ் கொப்பர் வி.க. அணி.
- மாலை 4.30 மணி - உடற்கல்வி அணி எதிர் சென்றலைட்ஸ் வி.க. அணி. (ஐ-3)

### ஆட்டங்கள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விளையாட்டு அவை இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் நடத்த ஏற்பாடு செய்திருந்த கரபந்தாட்டம், உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் மற்றும் மென பந்தாட்டம் ஆகிய போட்டிகளின் கால்இறுதி, அரையிறுதி ஆட்டங்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளன என்று யாழ். தேசிய கல்லூரி உடற்கல்வி விரிவுரையாளர் சரா புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இப்போட்டிகள் அனைத்தும் எதிர்வரும் 28ஆம், 29ஆம் திகதிகளில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## ஆஸி.அணி அரையிறுதிக்குத் தகுதி 9 விக்கெட்டுக்களால் வெற்றி!

ஐ.சி.சி. சம்பியன் கிண்ணைக் கிரிக்கெட் தொடரில் ஆஸ்திரேலிய அணி நேற்று பங்களாதேஷ் அணியை 9விக்கெட்டுகளால் வென்றது. இதன்மூலம் இத்தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு ஆஸ்திரேலிய அணி தகுதி பெற்றுள்ளது.

ஆஸ்திரேலிய - பங்களாதேஷ்



அணிகளுக்கிடையிலான போட்டி நேற்று எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் பங்களாதேஷ் அணித் தலைவர் காலித் மசூத் வென்றார்.

அதையடுத்து பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆஸியின் வேகப்பந்து வீச்சுத் தாக்குதலை எதிர்கொள்ள பங்களாதேஷ் வீரர்கள் திணறினர். அந்த அணியின் முதல் நான்கு வீரர்களும் 13 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

அலோக் கபாலி 75பந்து வீச்சுக்களில் 45ஓட்டங்களைப் பெற்றார். துஷார் இம்ரான் 27ஓட்டங்களையும், கலித் மசூத் 22ஓட்டங்களையும் பெற்றனர். இம்மூவரைத் தவிர வேறு எவரும் இரட்டை இலக்க எண்ணிக்கையான ஓட்டங்களைப் பெறவில்லை. 45.2 ஓவர்கள் முடிவில் 129 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது பங்களாதேஷ் அணி.

ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்களில் ஜேஸன் ஜிலெஸ்பி 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பிரெட்லீ 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ஷேன் வட்சன் 7 ஓட்டங்களுக்கு 2விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, 20.4 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

**மாலைதீவுக்குப் பயணம்**

குழு ஒன்றில் இடம்பெற்றுள்ள ஆஸ்திரேலிய அணி ஏற்கனவே நியூஸிலாந்து அணியை 164ஓட்டங்களால் வென்றது. தனது 2ஆவது வெற்றியின் மூலம் அவ் அணி அரையிறுதிக்குத் தகுதிபெற்றுவிட்டது. எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டியில் இலங்கை அணியுடன் ஆஸ்திரேலியா மோதவுள்ளது.

இப்போட்டிக்கிடையில் ஓய்வை அனுபவிப்பதற்காக ஆஸ்திரேலிய அணி நேற்று இரவு மாலைதீவுக்குப் புறப்படவிருந்தது. (ஐ)

### தென்னாபிரிக்கா - கென்யா இன்று களத்தில

ஐ.சி.சி. சம்பியன் கிண்ணத் தொடரில் இன்று தென்னாபிரிக்கா, கென்யா ஆகிய அணிகள் மோதவுள்ளன. ஆர். பிரேமதாஸ அரங்கில் பகல் - இரவு ஆட்டமாக இப்போட்டி நடைபெறவுள்ளது.

தென்னாபிரிக்க அணி தனது முதல் போட்டியில் மேற்கிந்திய அணியை வென்றது. கென்ய அணி மேற்கிந்திய அணியிடம் தோல்வி யுற்றது.

இக்குழுவில் முதலிடம் பெறும் அணி அரையிறுதிப் போட்டியில் இந்தியா அல்லது இங்கிலாந்து அணியுடன் மோதவுள்ளது (ஐ)

# ரணிலின் சமாதான முயற்சிகளுக்கு ஐ.நா.செயலாளர் நாயகம் பாராட்டு

இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனான் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார். அம்முயற்சியில் ஈடுபட்டிருக்கும் இலங்கை அரசாங்கத்தையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் அவர் பாராட்டியிருக்கிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கடந்த 18 ஆம் திகதி மாலை நியூயோர்க்கில் சந்தித்த பொழுதே ஐ.நா. செயலாளர் நாயகம் மகிழ்ச்சியும் பாராட்டும் தெரிவித்தார். சமாதான நடவடிக்கைகளை இதே அடிப்படையில் வெற்றிகரமாக மேலும் முன்னெடுத்துச்செல்ல முடியும் என்று நம்புவதாகவும் அவர் சொன்னார்.

ஐக்கிய நாடுகள் சபையினூடாக இலங்கைக்கு இதுவரை வழங்கிய ஒத்துழைப்புகளுக்காக பிரதமர் ரணில் தனது நன்றியை கோபி அனானுக்குத் தெரிவித்தார். வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு, மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஐக்கிய நாடுகள் சபை பெற்றுத்தந்த உதவி, நன்கொடைகள் உட்பட வழிகாட்டல்களும் பெரிதும் முக்கியத்துவம்மிக்கதாக அமைந்ததாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார். இலங்கையின் நிலைவரங்களை நேரடியாகப் பார்வையிட கூடிய விரைவில் இலங்கைக்கான விஜயம் ஒன்றினை மேற்கொள்ளுமாறு பிரதமர் ரணில், கோபி அனானுக்கு அழைப்பு விடுத்தார். விரைவில் இலங்கைக்கு வருவதற்கு எதிர்பார்ப்பதாக கோபி அனான் தெரிவித்தார். (ஐ)

## மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்திற்கு வரவில்லை

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பங்குபற்றவில்லை. அவர் அடுத்தடுத்து பங்குபற்றாத மூன்றாவது அமைச்சரவைக் கூட்டம் இதுவாகும்.

நேற்றுமுன்தினம் அமைச்சரவைக் கூட்டம் மாலை 6 மணிக்கு நடைபெறவிருந்தது. ஆயினும், வேறு ஒரு நிகழ்ச்சியில் தான் பங்குபற்றவிருப்பதால் அமைச்சரவைக் கூட்டத்தை 5.30 மணிக்கு ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்திருந்தார். அதன்படி அமைச்சரவை அரைமணி நேரத்துக்கு முன்னரே கூடிய போதிலும் ஜனாதிபதி பங்குபற்றவில்லை.

அமைச்சரவைக் கூட்டத்தில் தான பங்குபற்ற இயலாதிருப்பதை ஜனாதிபதி பின்னர் அறிவித்திருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளிநாடு சென்றிருப்பதால் மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கரு ஜயசூரியாவின் தலைமையில் அமைச்சரவை கூடியது.

ஜனாதிபதியின் அதிகாரங்களை ஒழிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை ஜனாதிபதி இக்கூட்டத்தில் சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அது சமர்ப்பிக்கப்படவில்லை.

எவ்வாறாயினும் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்களை ஒழிக்கும் ஒரு பத்திரத்தைச் சமர்ப்பிக்க ஜனாதிபதி உத்தேசித்திருக்கவில்லை என்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளரான ஹரீம் பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

"ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை நீக்க ஜனாதிபதி இணங்கியிருக்கிறார். அந்த அதிகாரங்களை முற்றுமுழுதாக நீக்குவது குறித்து தற்பொழுது ஆராயப்பட்டு வருகிறது. காலக்கிரமத்தில் அந்த சீரமைப்புகள அமைச்சரவைப் பத்திரமாக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும்.

- இவ்வாறு அவர் மேலும் கூறியிருக்கிறார். (ஐ-12)

## தனிநாடு பற்றிய நிலைப்பாட்டை புலிகள் விளக்கியது முக்கிய மாற்றம்

### தேசிய சமாதான சபை பிரமுகர் கூறுகிறார்

கொழும்பு,செப்.20

தனிநாடு பற்றிய தமது நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் விளக்குவதில் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. சுயநிர்ணயம், தாயகம் என்பவை எதனைக் குறிக்கின்றன என்பது பற்றிய சந்தேகங்களை அன்ரன் பாலசிங்கம் இத்தடவை நீக்கியிருக்கிறார்.

தேசிய சமாதானச் சபையின் ஊடக இயக்குநரான ஜெஹான் பெரேரா இவ்வாறு கருத்துக் கூறியிருக்கிறார்.

தாய்லாந்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்றுமுன்தினம் கூறியவை குறித்து கருத்துத் தெரிவித்திருக்கும் அவர், சுயநிர்ணயம், தாயகம் என்பவை பிரதேச சுயாட்சியையும் தன்னாட்சியையும் குறிக்கின்றன என்பதை பாலசிங்கம் தெளிவாகக் கூறியிருக்கிறார் எனவும் சொன்னார்.

அன்ரன் பாலசிங்கம் கூறியிருப்பவை சமாதானச் செயற்பாட்டில் ஒரு சாதகமான முன்னேற்றம் என்று வண. மாதுளுவாவே சோபித தேரர் கூறியிருக்கிறார்.

"நிலையான சமாதானத்தை அடைய சமாதானச் செயற்பாட்டால் நாம் முன்னேறிச்செல்ல வேண்டும். நாட்டைப் பிளவுபடுத்தாமல் பிரச்சினையைத் தீர்க்கும் ஒரு நிலையில் நாம் இப்பொழுது இருக்கிறோம். வேறுபாடுகளைக் களைந்து, உரிய அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள இது சரியான நேரமாகும்" எனவும் அவர் தெரிவித்திருக்கிறார். (ஐ)

### ஏழாலைப் பகுதியில் வலுக்குறைந்த மின்விநியோகம்

யாழ்ப்பாணம்,செப்.20

ஏழாலை கிழக்கு மற்றும் ஏழாலை தெற்கு, களவாவேடைப் பகுதிகளுக்கு வழங்கப்படும் மின்சாரம் வலுக்குறைந்ததாக உள்ளதாக மின்சாரப் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தினமும் அதிகாலை 5மணிமுதல் 7மணிவரையும், மாலை 5மணிமுதல் இரவு 10மணிவரையும் இப்பகுதிகளுக்கு வழங்கப்படும் மின்சாரம் மிகவும் வலுக்குறைந்துள்ளதாகவும் -

இது தொடர்பாக பலதடவைகள் மின்சாரசபைக்கு முறையிட்டபோதும் மின்சாரசபை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் - அப்பகுதி மக்கள் குறைகூறுகின்றனர். (ஓ-8)

### தொழில்சார் கற்கைநெறிக்கான நிறுவனம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.20

தொழில்சார் கற்கைநெறிகளுக்கான நிறுவனத்தின்(ஐ.பி.ஏ.எஸ்) அங்குரார்ப்பணவிழாவை இன்று காலை 9.30மணிக்கு சிலிங்கோ நிறுவன அதிகாரி வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கவிருக்கின்றார். இந்நிகழ்வில் பல கல்விமான்கள் பங்குபற்றவிருக்கின்றனர்.

யாழ்.பிரதான வீதியில் 199ஆம் இலக்கக் கட்டடத்தில் இந்நிறுவனம் அமைந்துள்ளது. (ஐ-3)

## திருமறைக் கலாமன்றத்தின் தமிழ்விழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.20

திருமறைக் கலாமன்றம் நடத்தும் வருடாந்த தமிழ் விழா இன்றும், நாளையும், நாளைமறுதினமும் மன்ற கலைத்தூது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

காலை, மாலை என இரு அமர்வுகளாக இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் கருத்துரைகள், நாடகங்கள், நாட்டுக்கூத்து, இசைக்கச்சேரி, நடனங்கள், குழுப்பாடல்கள், சொற்பொழிவுகள், கலைஞர் கௌரவிப்பு போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவிருக்கின்றன.

இந்த தமிழ் விழாவின் முதலாம் நாள் நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிமுதல் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா தலைமையில் நடைபெறும்.

இதில் "மரபு வழிக் கவிதைகள்" என்னும் தலைப்பில் திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் ஜோண்சன் ராஜ்குமாரும் -

"மரபு இலக்கியங்கள் ஒரு மீள் பார்வை" என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கணபதிப்பிள்ளை அருந்தாகரனும் -

"பாரம்பரியங்கள் ஒரு மீள்பார்வை" என்னும் தலைப்பில் யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப விரிவுரையாளர் ஏ.ஆர்.திலகரட்ணமும் கருத்துரை வழங்கவுள்ளனர். (ஓ-4)

## வடமராட்சி கிழக்குப் பகுதி புனரமைப்பு பற்றி ஆராய்வு

யாழ்ப்பாணம்,செப்.20

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மேற்கொள்ள வேண்டிய புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பாக உயர்மட்டக் கூட்டம் ஒன்று நேற்று மருதங்கேணியில் இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் க.வேலாயுதபிள்ளை தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன், கடற்புலிகளின் தளபதி சேணல் சூசை மற்றும் திணைக்கள தலைவர்கள் கலந்து கொண்டனர்.

அந்தப் பிரதேசத்தின் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள பல சர்வதேச அமைப்புக்கள் உதவ முன் வந்துள்ளதால் அந்த நிதியைப் பயன படுத்தி துரிதமாக புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அங்கு ஆராயப்பட்டது.

பாடசாலைகளைப் புனரமைப்பது, வீதிகளைத் திருத்துவது தொடர்பான திட்டங்களை முன்னெடுப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ-3)

### வல்லிபுர ஆலய ரதோற்சவ நேரடி அஞ்சல்

இன்று நடைபெறும் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் தேர்த்திருவிழா காலை 7.00மணிமுதல் இலங்கை வானொலியின் - யாழ்.சேவையில் நேரடியாக அஞ்சல் செய்யப்படும். நாளை சனிக்கிழமை நடைபெறும் கடல் தீர்த்தோற்சவமும் இதேபோன்று நேரடி அஞ்சல் செய்யப்படும். (ஓ)

# கண்ணிகளை அகற்றும் பணியினை வட-தென் கொரியாக்கள் ஆரம்பிப்பு



கண்ணி அகற்றும் பணியில் தென் கொரியப் படைகள்.

சியோல்,செப்.20

வட-தென் கொரியாக்களிடையேயான போக்கு வரதுக்கான சம்பிரதாயபூர்வமான ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றதைத் தொடர்ந்து இரு நாடுகளின் எல்லைகளுக்குமிடையில் அமைந்துள்ள இராணுவ சூனியப் பிரதேசத்தில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்றும் பணியை இருநாட்டு இராணுவத்தினரும் ஆரம்பித்துள்ளனர். இந்த இராணுவ சூனியப் பிரதேசததிலேயே இருநாடுகளதும் இறுதி ரயில் நிலையமான டொர்ஸன் ரயில் நிலையம் அமைந்துள்ளது.

மிக நீண்டகாலமாக பகைமை பாராட்டிவரும் இந்த இரு நாடுகளுக்குமிடையிலான எல்லைப் பகுதியில் 2.4 மைல் தூரத்துக்கு பரந்துள்ள இராணுவ சூனியப் பிரதேசத்தில் ஏராளமான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. இவற்றை அப்பகுதியில் இருந்து அகற்றினாலேயே பொதுமக்கள் பாதுகாப்பாகப் பிரயாணம் செய்யமுடியும்.

இதற்கான பணிகளை இருநாட்டு இராணுவத்தினரும் இப்போது ஆரம்பித்துள்ளனர். (ம)

# ஐவரிகோஸ்டில் நேற்று துப்பாக்கிச் சண்டை!

அபிஜான்,செப்.20

ஐவரிகோஸ்டின் வர்த்தகத் தலைநகரான அபிஜானில் நேற்றுக் காலை திடீரென கடும் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது. அரசுக்கு எதிரான சதி முயற்சியாக இது இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

காலை விடிவதற்கு முன்னரே கடுமையான துப்பாக்கிச் சண்டை ஆரம்பமானதாக உள்ளூர் வாசிகள் கூறுகின்றனர். அபிஜானில் உள்ள பொலீஸ் நிலையங்கள் அநேகமாக கிளர்ச்சியாளர்களால் முற்றுகையிடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஆனால், நம்பிக்கைக்குரிய 750 துருப்பினரைக் கொண்டு அபிஜான் பாதுகாக்கப்படுவதாக பிரதமர் பஸ்கல் அவ்வி குசென் தெரிவித்தார்.

ஐவரிகோஸ்ட் 1999இற்கு முன்னர் அமைதியான நாடாகவே இருந்தது. ஜெனரல் கை சதிப்புரட்சி மூலம் அந்த ஆண்டே ஆட்சியைக் கைப்பற்றினார். அடுத்த வருடமே பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள முடியாமல் அவர் நாட்டை விட்டுத் தப்பியோடினார்.

அதேயாண்டு நடைபெற்ற சர்ச்சைக்குரிய தேர்தலில் கபாக்கோ வெற்றிபெற்றார். அதன் பின்னர் கடந்த ஆண்டு அவரது ஆட்சியைக் கவிழ்க்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

தற்போது மீண்டும் சதி முயற்சி போன்று தோன்றும் ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது குறித்து இத்தாலிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி காபோ, "பிரச்சினை குறித்து நான் கேள்விப்பட்டேன். ஆனால், நிலைமையை நாம் கட்டுப்படுத்தி விட்டோம்" - என்றார். (ம)

# தற்கொலைத் தாக்குதலில் இஸ்ரேலியர் ஒருவர் பலி! பழிவாங்கும் படலத்தில் பலஸ்தீன சிறுவன் மரணம்!!

ஜெருசலேம்,செப்.20

இஸ்ரேலின் வடபகுதி நகர் ஒன்றின் பஸ் நிலையத்தில் இஸ்ரேலியப் பொலீஸார் வாகன ஒன்றின்மீது பலஸ்தீன போராளிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் பொலீஸார் ஒருவர் உயிரிழந்தார். மற்றும் இரு பொதுமக்கள் காயமடைந்தனர்.

அரபு இஸ்ரேலிய நகரமான உம் எல் - பாமில் மக்கள் நெரிசல் மிகுந்த மாலை நேரத்தில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது.

தற்கொலையாளி இஸ்ரேலிய பொலீஸின் வாகனத்தின் அருகில் வந்ததும் குண்டை வெடிக்க வைத்தார். ஆனால், அவரது இலக்காக பயணிகள் நிறைந்த பஸ்ஸே இருந்திருக்கக்கூடும் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

உடனடியாக இந்தத் தாக்குதலுக்கு எந்த இஸ்லாமியக் குழுவும் உரிமை கோரவில்லை. ஆனால், ஹமாஸ் இயக்கத்தின் பேச்சாளர் மொகமட் சாஹர் இந்தத் தாக்குதலை வரவேற்றுள்ளார்.

பலஸ்தீனத்துடன் சமாதானப் பேச்சு எதனையாவது ஆரம்பிப்பதாக இருந்தால் இஸ்ரேலியப் பகுதிகளில் பலஸ்தீனர்களால் மேற்கொள்ளப்படும் வன்முறைகள் அனைத்தும் நிறுத்தப்படவேண்டும் என்று இஸ்ரேலியப் பிரதமர் தெரிவித்த சிறிது காலத்தின் பின்னர் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இம்மாத ஆரம்பத்தில் ஷெரோன் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

பலஸ்தீனப் பகுதிகளின் தேடுதல் நடவடிக்கை என்ற பெயரில் பொதுமக்கள் கைது செய்யப்படுவதும், விசாரணைகள் எதுவுமின்றி பலஸ்தீனர்கள் சுட்டுக்கொல்லப்படுவதும் அவர்களது சொத்துக்கள் அழிந்து நாசம் செய்யப்படுவதும் தொடரும்வரை இஸ்ரேலில் பலஸ்தீனர்களின் வன்செயல்கள் முடிவுக்கு வராது என்று பலஸ்தீன அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை - பழிவாங்கும் தாக்குதலாக மேற்குக் கரையின் அல்-பிறே நகரில் இஸ்ரேலிய டாங்கியை நோக்கி கல்லெறிந்த பலஸ்தீன 10 வயதுச் சிறுவனை இஸ்ரேலியப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

அத்துடன் தீவிரவாதிகளின் வீடுகள் எனக் கூறிக்கொண்டு பலஸ்தீனர்கள் இருவரின் வீடு களை இஸ்ரேல் தரைமட்டமாக்கியது. புல்டோசர்களைக் கொண்டு உரிமையாளர்களின் முன்னிலை யிலேயே இந்த இரு வீடுகளும் தரைமட்டமாக்கப்பட்டன. (ம)



இஸ்ரேலிய டாங்கி மீது கல்லெறியும் பலஸ்தீனச் சிறுவன்.

## 21மணிநேர போராட்டத்தின்பின்

# ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் சத்திரசிகிச்சை மூலம் பிரிப்பு!

## சவூதிஅரேபிய மருத்துவர்கள் சாதனை

ரியாத்,செப்.20

மார்பிலிருந்து அடிவயிறுவரை ஒட்டியபடி பிறந்த இரட்டையரை 21 மணிநேர சத்திரசிகிச்சைமூலம் தனித்தனியே பிரித்துச் சாதனை புரிந்துள்ளனர் சவூதி அரேபிய மருத்துவர்கள்.

ரியாத்தில் உள்ள மன்னர் அப்துல் அஜீஸ் மருத்துவ நகர மருத்துவமனையில் செவ்வாய்க்கிழமை தொடங்கிய சத்திரசிகிச்சை புதன் கிழமை காலையில் முடிவடைந்தது. தற்போது 4 வயதான அகமது, முகமது ரஹீம் ஆகிய இரு குழந்தைகளும் நலமாக இருப்பதாக சத்திர சிகிச்சை செய்த டாக்டர்கள் குழுவுக்குத் தலைமை வகித்த டாகடர் அப்துல்லா அல்ரூபீயா கூறினார்.

ஏற்கனவே இதுபோன்ற 5 சத்திர சிகிச்சைகளை வெற்றிகரமாகச் செய்திருப்பவர் டாக்டர் அப்துல்லா. செவ்வாய்க்கிழமை நடந்த சத்திர சிகிச்சையானது சவூதி அரேபிய நல்வாழ்வுத்துறையின் இணையத்தளத்தில் நேரடியாகக் காட்டப்பட்டது.

எகிப்து அரசு நியமித்த மதகுருமார்கள் குழுவின் அனுமதியைப் பெற்றபின் இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அதற்கான செலவை சவூதி இளவரசர் அப்துல் அஜீஸ் ஏற்றுக்கொள்வதாக அறிவித்தார். (ம)

## சிம்பாப்வேயில்

# வெள்ளை இன விவசாயிகளை வெளியேற்ற புதிய சட்டம் அறிமுகம்

ஹராரே,செப்.20

சிம்பாப்வேயில் வெள்ளையின விவசாயிகளிடம் இருந்து விவசாயப் பண்ணைகளை மீளப்பெறுவதைத் துரிதப்படுத்துவதற்காக அரசு புதிய சட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தச் சட்டத்தின்படி பண்ணைகளைவிட்டு வெளியேறுமாறு நோட்டீஸ் வழங்கப்பட்ட ஒரு வாரத்துக்குள் வெள்ளையின விவசாயிகள் தமது நிலங்களை விட்டு வெளியேற வேண்டும்.

முன்னர் இருந்த சட்டத்தின்படி நோட்டீஸ் வழங்கிய 90 நாள்களுக்குள் விவசாயிகள் நிலங்களைவிட்டு வெளியேறினால் போதுமானது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பல வெள்ளையின விவசாயிகள் தமது நிலங்களைவிட்டு வெளியேறுவதைத் தாமதப்படுத்தி வந்தனர். இதனைத் தடுத்து விவசாயிகளை பண்ணையை விட்டு வெளியேற்றுவதைத் துரிதப்படுத்த சிம்பாப்வே அரசு புதிய சட்டத்தைக் கொண்டுவந்துள்ளது.

இந்தப் புதிய சட்டம் வெள்ளையின விவசாயிகளுக்கு எதிரான போரில் சிம்பாப்வே அதிபர் றொபேர்ட் முகாபேக்கு கிடைத்த பெருவெற்றி என்று கருதப்படுகின்றது.

புதிய சட்டத்தையடுத்து, வெள்ளையின விவசாயிகளுடனான முகாபே அரசின் போர் சர்ச்சைக்குரிய ஒரு கட்டத்தை அடைந்துள்ளது.

புதிய சட்டத்தின்படி நோட்டீஸ் கிடைத்த பின்பும் வெளியேறாது விட்டால் அதற்காக ஒரு லட்சம் சிம்பாப்வே டொலர்கள் அபராதம் விதிக்கப்படலாம். (ம)

## செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கு

# 3 ஆண்டுகளுக்கு முன்பே பின்லேடன் அமெ.மீது தாக்குவார் என்பது தெரியும்

## செனட் விசாரணைக்குழு அறிக்கை

வாஷிங்ரன்,செப்.20

"ஒஸாமா பின்லேடன் விமானங்கள்மூலம் அமெரிக்க இலக்குகளைத் தாக்கக்கூடும் என்று செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கு மூன்று ஆண்டுகள் முன்னரே அமெரிக்க புலனாய்வு அமைப்புகள் எச்சரிக்கை விடுத்திருந்தன."

கடந்த ஆண்டு செப்ரெம்பர் 11 இல் அமெரிக்காமீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலைக் கண்டறிந்து அதனைத் தடுப்பதில் அமெரிக்க உளவு அமைப்புகள் தோல்வியடைந்தமை தொடர்பாக விசாரணை நடத்திய அமெரிக்க செனட் குழுவின் தலைவர் எலானோர் ஹில்லே மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

"ஆனால், விமானங்களைக் கடத்தி அவற்றை கட்டடங்களுக்குள் செலுத்துவது நிகழக்கூடியது என்று அவர்கள் கணிக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அல்கெய்டா அமைப்பின் செயற்பாடுகள் குறித்து சரியான தகவல்களைப் பெறுவதில் அமெரிக்க உளவு அமைப்புகள் தவறிவிட்டன என்ற குற்றச்சாட்டு பல தரப்பினராலும் முன்வைக்கப்பட்டதையடுத்து அது குறித்து விசாரிக்க செனட் உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதன் தலைவரே எலானோர் ஹில்.

1998இல் அமெரிக்க உளவு நிறுவனம் ஒன்றின் 30 பக்க அறிக்கையில் "வெளிநாடு ஒன்றிலிருந்து விமானம்மூலம் உலக வர்த்தக மையக் கட்டடம்மீது தாக்குதல் நடத்த அடையாளம் தெரியாத அரபுக்கள் சிலர் திட்டமிடுகின்றனர்" - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அது குறித்து மேலதிக தகவல் எதுவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கவில்லை என்று செனட் குழு தெரிவித்துள்ளது.



செப்ரெம்பர் 11 தாக்குதல்

இந்த விசாரணைகளுக்காக குழுவின் தலைவரான ஹில் ஆவணங்களின் 4 லட்சம் பக்கங்களைப் படித்துள்ளார்.

செப்ரெம்பர் 11 தாக்குதல் நடைபெறுவதற்கு சில மாதங்கள் முன்னர் கென்யாவிலுள்ள அமெரிக்க தூதரகம்மீது பின்லேடன் விமானம் மூலம் தாக்குதல் நடத்தலாம் என்று அமெரிக்க உளவு அமைப்பு ஒன்று எச்சரித்துள்ளதாகவும் அவர் கூறுகிறார்.

செப்ரெம்பர் தாக்குதல் குறித்து முன்னெச்சரிக்கைத் தகவல் எதுவும் தனக்குக் கிடைக்கவில்லை என்று அமெரிக்க அரசு முன்னர் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது.

தற்போது செனட் விசாரணைக் குழுவின் அறிக்கை அமெரிக்க அரசுக்கு பெரும் தர்மசங்கடத்தைத் தோற்றுவித்துள்ளது.

செப்ரெம்பர் 11 தாக்குதல் குறித்து மேலும் தகவல்கள் ஏதும் கிடைத்ததா - அதாவது, தாக்குதல் இலக்கு அல்லது தாக்குதலுக்கான திகதி என்பன குறித்த தகவல் ஏதாவது உளவு அமைப்புகளுக்கு கிடைத்ததா என்பது குறித்து தான் மேலதிக தகவல்களை எதிர்பார்த்துள்ளதாக ஹில் தெரிவித்துள்ளார்.

எப்படியிருப்பினும் அமெரிக்காமீது பின்லேடன் தாக்குதல் நடத்தப் போகிறார் என்ற தகவல் முன்னரே கிடைத்துள்ளது என்பதுதான் இங்கு முக்கிய விடயம் என்று அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ம)

# தீவிரவாதிகளுக்கு உதவிய கணனி இயக்குநர் பிரிட்டனில் கைது!

லண்டன்,செப்.20

பிரிட்டனில் வசிக்கும் கணனி இயக்குநர் ஒருவர் லண்டன் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். தீவிரவாதத் தாக்குதல்களுக்கான தகவல்களை தீவிரவாதிகள் பெறுவதற்கு உதவினார் என்ற குற்றச்சாட்டின்பேரிலேயே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முகமட் அப்துல்லா அஸாம் (வயது32) என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார். கடந்த ஞாயிறன்று இவர் கைதுசெய்யப்பட்டதாக ஸ்கொட்லண்ட் யார்ட் பொலீஸார் தெரிவித்தனர்.

அவர் எந்த தீவிரவாத அமைப்புடன் தொடர்பு வைத்திருந்தார் என்றோ, எத்தகைய தகவலை வழங்கினார் என்றோ பொலீஸார் தெளிவாக்கவில்லை. ஆனால், அவர் வழங்கிய தகவல் தீவிரவாதத் தாக்குதலுக்கு உதவியது என்பது மட்டும் உண்மை என்று அவர்கள் கூறினர். (ம)

# யாழ். வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா சிறப்பு மலர்

## 20.09.2002

## சுடராழியானே!

அன்பரைக்காத்தானந்த மளிப்பாய்
இன்பமே நீதானீடில்லை யுமக்கு
உணர்வும் நீதானு னும் நீரே.
ஐயமேயில்லை, ஒப்பிலாமணியே!
ஓதியுணர்ந்தவ் வைத்தமிழில்
அழகா! உன்னைப் பாடுகின்றோம்
தேரேறி வருகின்றாய்! – திருமாலே
வல்லிபுரத்தினுயர் சுடராழியானே!

மாருதி
*ஆவரங்கால்*



## அறங்காவலர் சபையின் வாழ்த்து

“எல்லா உயிர்களிடத்திலும் நான் இருக்கின்றேன்” என்ற பகவத்கீதையின் வாக்குக்கிணங்க இலங்கைவாழ் சகல இனமக்களும் ஐக்கியத்தையும் சாந்தியையும் பெறவேண்டும் என நாம் நாராயணனைப் பிரார்த்திக்கின்றோம். இன்று வெள்ளிக்கிழமை (20.09.2002) தேரேறிவரும் சக்கர ஆழ்வார் தர்மத்தை நிலைக்கச் செய்வார். நாளை சனிக்கிழமை (21.09.2002) வங்கக்கடலில் தீர்த்த உற்சவம் நடைபெறும். எம்பெருமான் பக்தர்கள் அனைவரும் இம்மஹோற்சவங்களில் கலந்து கொண்டு இறையருள் பெற்று, சாந்தியைப் பெறுவீர்களாக!

ஓம் நாராயணனே சரணம்!

*துன்னாலை வடக்கு,*
*புலோலி.*
*19-09.2002*

திரு.இ.அன்னலிங்கம்
*தலைவர்,*
*அறங்காவலர் சபை.*

# அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் பிரதான குருமார்களின் அருளாசிகள்

மெய்யன்பர்களே!

“அவனருளாலே அவன்தாள் பணிந்து”

“தேவர்களைத் தொழுபவர்கள் தேவர்களையடைகின்றனர். பிதிர்களைப் போற்றுபவர் பிதிர்களைப் பெறுகின்றனர். பூதங்களை வணங்குபவர் பூதங்களைப் போய்ச் சேர்கின்றனர். என்னைப் பூசிக்கின்றவர்கள் என்னையே எய்துவார்கள்”

இவ்வாறு பகவத்கீதை, ராஜவித்யாராஜ குஹ்ய யோகத்தில் 25ஆவது சுலோகமாக பகவான் அருச்சுனன் மூலமாக உலகோர்க்கு உபதேசித்துள்ளார்.

எனவே, ஆன்மாக்களாகிய நாமனைவரும் இன, மத, மொழி, பேதங்கள் இன்றி அனைத்து ஜீவராசிகளையும் அரவணைத்து, மதித்து, மகிழ்ந்து உறவாடி இன்று தேரேறி வருகின்ற வல்லிபுரச் சுடராழி மாயனது பாதாரவிந்தங்களைப் பணிந்துய்வோமாகுக!

இன்றைய தினம் மிகப் பெறுமதி வாய்ந்த புண்ணிய தினமாகும். இந்த ஆண்டில் இப்போது நடைபெறுகின்ற இந்த இரதோற்சவமானது மிகமிக அமைதியான சூழலில், மக்களின் அசைக்கமுடியாத ஆன்மீக நம்பிக்கையில் பேசப்படுகின்ற, போற்றப்படுகின்ற திருவிழாவாகும்.

எல்லாம்வல்ல எம்பெருமான் காத்தற் கடவுளான, அரவணையில் பள்ளி கொள்ளும் ஸ்ரீமந்நாராயணச் சுடராழியானின் நல்லருளாசிகளையும் வாழ்த்துக்களையும் இங்கே கூடியுள்ள அடியவர் கூட்டத்தினர்க்கும் வராது போன அடியவர்களுக்கும் குவலயம் வாழ் அனைவர்க்கும் கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். வல்லிபுரச் சுடராழியான் ஆசிகள் அனைவர்க்கும் உரித்தாகுக!

“வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டே”

பிரதான சிவாச்சாரியார்கள்:

**பிரம்மஸ்ரீ ச.க.புருஷோத்தமக்குரு**
**பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு.**
*ஸ்ரீஆழ்வார் பீடம்,*
*ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்,*
*துன்னாலை வடக்கு, புலோலி.*

## தேரேறி வருகுவாயே!

கல்லான அகலியைக் காத்திட்ட கருணையார் கமலப் பாதா
வில்லான மேருவையே முறித்திட்டு கீதைதனை மணந்த மார்பா
வல்லவனாம் கம்ஸனை வதைத்துமே வையகம் வாழவைத்தோய்
இல்லமார் விளக்கென எமதிருள் கடிந்து தேரேறி வருகுவையே!

மு.தணிகாசலம்
*கற்கோவளம்.*

*சிறப்புமலர் தொகுப்பு:*
**ச.யாதவானந்தன், த.ஜெயரூபன்.**
**கற்கோவளம்.**


ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருள் அனைவரும் பெற்றிட வேண்டி நிற்கின்றோம்.
**ஈஸ்வரி நகை அகம்**
*பிரதான வீதி, பருத்தித்துறை.*
அழகிய தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்.

கீதை சொன்ன கண்ணன் வண்ணத் தேரில் வருகிறான்
**சிவராஜ் ரேடிங்கோ**
*பிரதான வீதி, பருத்தித்துறை.*
மின்சார உதிரிப்பாகங்கள் கட்டடப் பொருள்கள் நியாய விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்.

தேரேறிவரும் மாயவா
எம்மைப் பார்போற்ற வாழவைக்கும் கோபாலா
**வைஷ்ணவி நகைப்பூங்கா**
*பிரதான வீதி, நெல்லியடி.*
நீடித்து நிலைக்கும் தரமான நகைகள் பெற்றுக்கொள்ள தவறாமல் நாடுமிடம்.

இன்று தேர் உலாவரும் வல்லிபுர ஆழ்வாரின் அருள்வேண்டி நிற்கின்றோம்
**சுவர்ண மஹால்**
*பிரதான வீதி, நெல்லியடி.*
அழகிய தங்க நகைகளைச் செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்.

தேரேறிவரும் மாயவனின் அருள் வேண்டி நிற்கின்றோம்.
**ஜனனி நகைமாடம்**
*மருதடி - பருத்தித்துறை.*
**புதிய ஜனனி நகைமாடம்**
*பஸ்நிலையம் அருகில், பருத்தித்துறை.*
**ஜனனி நகைமாடம்**
*நெல்லியடி, கரவெட்டி.*
அழகிய தங்க நகைகளைச் செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரின் அருள் கிடைக்க வணங்கி நிற்கின்றோம்
**தரன் நகைமாளிகை**
*பிரதான வீதி, பருத்தித்துறை.*
**தரன் நகைமாளிகை**
*ம.ம.வி.வீதி, நெல்லியடி.*
ஓடர் நகைகள் குறித்த தவணையில் 22 கரட் தங்கத்தில் செய்துகொடுக்கப்படும்.
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்.

தேரேறிவரும் மாயவனின் அருள்வேண்டி நிற்கின்றோம்.
**ராகுல சூரியன்ஸ் புடவை அகம்**
*பிரதான வீதி, பருத்தித்துறை.*

“பார்த்தனுக்கு கீதை சொன்ன பார்த்த சாரதியாம் கண்ணன் இன்று வண்ணத் தேரில் வருகிறான”
*வாழ்த்துவோர்:*
**ஆதிமூல லக்ஸ்மி நாராயண அமுதசுரபி ஈசான மடம்**
*கற்கோவளம்.* நிர்வாகம்.

# உதயன்

## பேச்சுக்கு வரவேற்பு

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே தாய்லாந்தில் நடந்த மூன்று நாள்கள் முதற்சுற்றுப் பேச்சு, சமாதான முயற்சிகளை எதிர்ப்பவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக நல்லபடியாகவும் பயனுள்ளதாகவும் அமைந்துவிட்டது.

இந்தப் பேச்சினால் புலிகளின் கை ஓங்கிவிடும், நாட்டுப் பிரிவினை ஏற்பட்டுவிடும் என்று அஞ்சியவர்கள் இப்போது அந்த அச்சம் நீங்கி, ஆறுதல் அடைந்திருக்கிறார்கள்.

சமாதானத்தை விரும்பும் இந்த நாட்டு மக்களின் பெரும் பகுதியினர் புது உற்சாகம் பெற்றிருக்கிறார்கள். பேச்சு வெற்றி பெறும். இனப்பிரச்சினை தீர்க்கப்படும். நாட்டில் போர்க்கொடுமை நீங்கி, நிலையான அமைதி, சமாதானம் மலரும் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

அரசினரும் புலிகளும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் பேச்சில் இறங்கியிருக்கிறார்கள் என்பதை மக்கள் நிதர்சனமாகக் கண்டுகொண்டார்கள்.

முதற்சுற்றுப் பேச்சின் முடிவில் அரச குழுத் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும், புலிகள் குழுத் தலைவர் அன்ரன் பாலசிங்கமும் பெரும் எண்ணிக்கையான உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்குத் தெரிவித்த கருத்துக்கள் எல்லோராலும் வெகுவாக வரவேற்கப்பட்டிருக்கின்றன.

பேராசிரியர் பீரிஸ் அரசின் நல்லெண்ணத்தையும் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் இணக்கத்தையும் இலங்கையில் எதிர்கால அரசியல் எப்படி இருக்கப்போகிறது என்பதையும் சூசகமாக வெளிப்படுத்தினார்.

"வடக்கு - கிழக்கைக் கட்டி எழுப்பவும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர வைத்து அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கவும் நாம் (அரசு - புலிகள்) இணைந்து வெளிநாடுகளிடமிருந்து உதவி கேட்டுப் பெறவிருக்கிறோம்.

நாட்டைப் பிளவுபடுத்தாமலே விடுதலைப் புலிகளின் சுயாட்சிக் கனவு நிறைவேறும். உரிய முறையில் நாம் செயற்படுவோமானால் வடக்கு - கிழக்கு மக்களின் அபிலாஷைகள் எல்லாம் நிறைவேறிவிடும்" - என்றார் பேராசிரியர் பீரிஸ்.

அன்ரன் பாலசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் - முன்னர் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் எல்லாம் தோல்வியில் முடிந்தபோதிலும் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பேச்சுக்கள் வெற்றிபெறும் என்று நம்புவதற்கு ஐந்து காரணங்களைக் காட்டினார்.

புலிகள் தனிநாட்டுக்குத் திட்டமிடுகிறார்கள் என்று பலரிடையே உள்ள சந்தேகத்தை நீக்கும் வகையில் "தமிழர் தாயகத்தில் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சி தாருங்கள்" என்று கேட்டால் அது தமிழீழக் கோரிக்கையா என்று வினவினார். இந்தத் தப்பபிப்பிராயம் வேண்டாம் என்றும் அவர் சொன்னார்.

அதேவேளை, சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சி தராமல் அடக்குமுறை சூழ்நிலைகள் தொடருமானால், தாம் பிரிந்துநின்று தனிநாட்டுக்காகப் போராடுவதைத் தவிர தமக்கு வேறு வழி இல்லை என்றும் அன்ரன் பாலசிங்கம் சொல்லி வைத்தார்.

இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளுக்கு வழங்குவது தனிநாட்டுக்கு வழிசெய்துகொடுக்கும் முதற்படி என்று கூறுவது தவறான கருத்து என்றும் பாலசிங்கம் சுட்டிக்காட்டி அதற்கும் விளக்கம் அளித்தார்.

இடைக்கால நிர்வாகத்தில் தமிழ், முஸ்லிம், சிங்களம் ஆகிய மூன்று சமூகத்தினருக்கும் பங்குண்டு என்றும் பாலசிங்கம் தெரிவித்தார்.

மொத்தத்தில் அரசோ, புலிகளோ எதையும் இழக்காமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவும் சமாதானத்தை ஏற்படுத்தவும் முதற்சுற்றுப் பேச்சு முதற்படியாக அமைந்திருக்கிறது என்பதே எல்லோருடைய கருத்துமாகும்.

இப்போது அமெரிக்காவிலுள்ள பிரதமர் ரணில் பேச்சுப் பற்றி மகிழ்ச்சியும் திருப்தியும் தெரிவித்திருக்கிறார். ஜனாதிபதியின் பேச்சாளர் கூட முதற்சுற்றுப் பேச்சை வரவேற்றிருக்கிறார். அரசியல் தலைவர்கள் பலரும் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். ஜே.வி.பியினர் மட்டும் விதிவிலக்கு.

புலிகள் தமது சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையிலிருந்தும், தாயகக் கோட்பாட்டிலிருந்தும் இம்மியும் விலகவில்லையே என்று அவர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். அவர்களுடைய கருத்தை இன்று யார் காதில் போட்டுக்கொள்கிறார்கள்?

---

தமிழ்மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும்.
இல்லையெனில் எதிர்காலம் இருண்டதாகிவிடும்.
- லெப். கேணல் திலீபன்.



### பருத்தித்துறைப் போராட்டம் தொடர்பான

# படையினரின் தேடுதல் நடவடிக்கைக்கு வெகுஜன அமைப்புகள் ஒன்றியம் கண்டனம்

கரவெட்டி,செப்.20

பருத்தித்துறையில் கடந்த 2ஆம் திகதி இடம்பெற்ற மாணவர் போராட்டம் தொடர்பாக படையினர் மேற்கொண்டுவரும் தேடுதல் நடவடிக்கைகளுக்கு வடமராட்சி வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:-

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மற்றும் ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களும், கல்விச் சமூகமும் சுதந்திரமாக எவ்வித அச்சுறுத்தலுமின்றி தமது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள வசதியாக, இப்பாடசாலைகளை அண்மித்துள்ள கல்லூரி வீதி, சுப்பர்மட வீதி ஆகியவற்றிலுள்ள இராணுவ முன்னரங்கக் காவலரண்களை அகற்றுமாறுகோரி கடந்த 2ஆம திகதி வடமராட்சியிலுள்ள மாணவர் மற்றும் பொது அமைப்புகளால் போராட்டம் நடத்தப்பட்டது.

இதுதொடர்பாக கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள், மாணவர்கள் உட்பட பலரை இரவும் பகலுமாக பாதுகாப்புப் படையினர் தேடிவருவதாகத் தெரியவருகிறது.

அன்றையதினம் நடைபெற்ற போராட்டத்தின்போது சில விரும்பத்தகாத நிகழ்வுகள் இரண்டு தரப்பிலும் நடைபெற்றமை யாவரும் அறிந்ததே.

ஸ்ரீலங்கா அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பும் தமக்கிடையேயான பகைமையை மறந்து சமாதானத்தை முன்னெடுக்க ஒரே மேடையில் உட்கார்ந்து பேச்சு நடத்துகின்ற இந்தநாள்களில், மக்களின் இயல்பு வாழ்க்கையை உருவாக்கி, மக்கள் மனங்களை வெல்லவேண்டிய பாதுகாப்புப் படையினர் அதற்கு ஊறு விளைவிக்கும் நோக்கத்துடன் மக்களுக்கு மனக்கிலேசங்களை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்வதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மக்களுக்கு அச்சுறுத்தல் தொடரும் பட்சத்தில் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பது தவிர்க்கமுடியாததாகிவிடுமெனவும் எச்சரிக்கை விடுக்கின்றோம் - என்றுள்ளது. (ஓ-70)

## "புலிகளின்குரல்" நாடெங்கும்

கொழும்பு,செப்.20

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அதிகாரபூர்வ வானொலிச் சேவையான "புலிகளின்குரல்" ஒலிபரப்புச் சேவையை நாடுமுழுவதிலும் ஒலிபரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக சிங்கள வாரப்பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

"புலிகளின்குரல்" வானொலி ஒலிபரப்புச் சேவையை சிற்றலை, மத்திய அலை ஆகிய அலைவரிசைகளிலும் நாடளாவியரீதியில் ஒலிபரப்பப்படவுள்ளதாக மட்டக்களப்பில் செய்தியாளர்களைச் சந்தித்த "புலிகளின்குரல்" செய்தி ஆசிரியர் தவபாலன் தெரிவித்திருக்கின்றார். (ஓ)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவருக்கு கடும் எச்சரிக்கை!

## கலாசாரத்தைப்பேணும் இளைஞர்களால்

யாழ்ப்பாணம்,செப்.20

நீண்டகாலமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுவந்த இருவரை அவர்கள் கசிப்பு உற்பத்தியை மேற்கொண்டவேளை கலாசாரத்தைப்பேணும் குழுவினரிடம் கையும்மெய்யுமாகப் பிடிபட்டனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் நாவாந்துறைப் பகுதியில் இடம்பெற்றது.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

நாவாந்துறைப் பகுதியில் பெண்மணி ஒருவரும், ஆண் ஒருவரும் தனித்தனியே நீண்டநாள்களாக கசிப்பு உற்பத்தியில் ஈடுப்பட்டுவந்தார்கள். இவர்கள் இருவரையும் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் பலதடவைகள் கைதுசெய்து நீதிமன்றங்களில் நிறுத்தியபோதும் இவர்கள் கசிப்புக் காய்ச்சும் தொழிலில் தொடர்ந்து ஈடுபட்டுவந்தனர்.

இதுதொடர்பாக கலாசாரத்தைப்பேணும் இளைஞர்களிடம் முறைப்பாடு செய்யப்பட்டதாம். இதனையடுத்து அங்கு சென்ற இளைஞர் குழுவினர் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அந்த இருவரையும் கையும்மெய்யுமாகப் பிடித்ததாகவும் -

அங்கிருந்த கசிப்பு முழுவதையும் நிலத்தில் ஊற்றிவிட்டு கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் அனைத்தையும் சேதப்படுத்தி அழித்ததாகவும் - கூறப்படுகிறது.

அத்துடன் கசிப்புக் காய்ச்சிய இருவருக்கும் கசிப்பினால் ஏற்படும் விளைவுகள்பற்றி எடுத்துக்கூறிய இளைஞர்கள் "மனித சமுதாயத்திற்கு கேடுவிளைவிக்கும் கசிப்பு உற்பத்தியை எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளுமிடத்து இதனைவிட மோசமான தண்டனைக்குள்ளாக நேரிடும் என்று எச்சரிக்கை செய்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஓ-நீ)

## புனர்வாழ்வு நிறுவன ஏற்பாட்டில் இலவசக் கணனிப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,செப்.20

பாடசாலை மாணவர்களுக்கான இலவச கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றினை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் செயற்படுத்தி வருகின்றது.

கிராமப்புறப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் மத்தியில் கணனி தொடர்பான அறிவை ஏற்படுத்தும்வகையில் செயற்படுத்தப்பட்டுவரும் இந்தத் திட்டத்துக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆதரவு வழங்கி வருகின்றது.

யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள அகதிகள் புனர்வாழ்வு நிறுவன அலுவலகத்துக்கு மாணவர்கள் அழைத்துவரப்பட்டு அங்கு கணனிப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

பயிற்சியின் முடிவில் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு கணனிப் பயிற்சியை முடித்துக்கொண்ட கொக்குவில் ஞானபண்டித பாடசாலை மாணவர்களுக்கு நேற்றுமுன் தினம் பாடசாலையில் வைத்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-4)

### நாளை

புரட்டாதி 05
சனிக்கிழமை
(21.09.2002)
திதி : பூரணை
முன்னிரவு 7.49 வரை.
நட்சத்திரம்: பூரட்டாதி
மாலை 6.16 வரை.
பூரணை விரதநாள்
உமா மகேஸ்வர விரதம்
சுபநேரம் : 3.02 - 4.32
ராகுகாலம் : 9.02 - 10.32
(பழைய நேரப்படி)


### உதய வாக்கு

முட்டாள் தனமான அச்சம் அபாயத்தை இரட்டிப்பாக்குகிறது.

### வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா இன்றாகும்

அலை பொங்கும் கடலோரம்
நிலை கொண்ட மாலவனே
மலை கூட மலராகும்
நின் அருளின் மகிமையாலே
உன் மேனியின் வண்ணம் கொண்ட
கார்முகில் கூட்டமெல்லாம்
நீ தேரேறும் காட்சி கண்டு
ஆனந்த கண்ணீர்விட
அலையுது விண்ணில் இங்கே.

பரணி பாதுசன் நல்லூர்.



பழையவீடுகள், தளபாடங்கள், மரவாகனங்கள், பித்தளைச் சாமன்கள் என்பன அரும் பொருட்கள். இவற்றை வர்த்தகப் பொருளாக்குபவர்கள் பற்றி விழிப்புடன் இருப்போம். இவற்றின் தொடர்ந்த இருப்பை உள்ளூரில் உறுதி செய்வோம்.

அரும்பொருட்களும் தொல்பொருட்களும் தேசத்தின் சொத்தும், அதன் வரலாற்றின் அடையாளமும் ஆகும். இவற்றை அழிப்பதும், இந்த மண்ணை விட்டு வெளியேற அனுமதிப்பதும், தேசவரலாற்றையும், இனஅடையாளத்தையும் அழிக்கும் செயலாகும்.

முதுசம் Vii, கலைவட்டம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# வரலாற்று வறுமையும் கையறு நிலையும் தமிழ்ச் சமூகத்துக்கு நேர்ந்தது எவ்வாறு?

உலகப் பொதுவான இனம், மொழி, தேசியம், வரலாறு, பண்பாடு, சுயம் என்பன பற்றிப் பேசும்போது, 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் முன் தோன்றிய மூத்தகுடிகள்' எனப் பெருமைப்படும் இனம் தமிழினம். ஆனால், வரலாற்றுத் தொடர்ச்சியற்றவர்கள், தாயகதேசம் இல்லாதவர்கள், வந்தேறுகுடிகள், பண்பாடு அடையாத கலாசாரத்தை உடையவர்கள், ஒரு வகையில் வரலாற்று அநாதைகள் எனப் பிற இனத்தவரால் தமது இருப்புகள் நிராகரிக்கப்படுகின்றபோதும், திட்டமிட்டுத் தமது பண்பாட்டு அடையாளங்களை அழிக்கின்ற போதும், கையகப்படுத்திச் செல்கின்ற போதும், எள்ளி நகையாடிய போதும் தேசிய விழிப்புணர்வோ, பண்பாட்டு, பிரக்ஞையோ இன்றி வாழா இருந்துவிடுகின்றனர். சங்ககாலம் முதல் சமகாலம் வரை இருந்த இருண்மை, வரலாற்றுச் சாபம் எம்மைத் தொடர்ந்தபடியே உள்ளது.

வரலாற்றுத் தனித்துவம், இருப்பு நிலை, பண்பாட்டு வாழ்வியல் தனித்துவங்களைக் கொண்டு வாழ்ந்து வரும் இனங்களுள் தமிழ் இனமும் ஒன்று. ஆனால், அதுதன் இனத் தொடர்ச்சியையும் பாரம்பரியத்தையும் பேணுவதில், பாதுகாப்பதில், உறுதிசெய்வதில் ஆத்மார்த்தமாகத் தன்னை ஈடுபடுத்தியுள்ளதா என்பது விவாதத்துக்கும் வேதனைக்கும் உரிய கேள்வியாகும்.

எமது இனத் தொன்மையையும், இருப்பையும் எடுத்துணர்த்தும் மொழி, பண்பாட்டு அடையாளங்கள், நதி மூலங்கள், அரும்பொருட் செல்வங்கள் காலத்திற்குக் காலம் அழிந்தும் அழிக்கப்பட்டும் வந்துள்ளன. இதனால் வரலாற்று வறுமையும் கையறு நிலையுமே எமக்கு மிஞ்சிவிடுகிறது. ஈழத் தமிழர்கள் இந்த இன்னலை, நெருக்குதலை இன்றளவும் அனுபவித்தும் சிந்திக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டும், அதன் இருப்புக்களை நிலை நிறுத்தவும் மீட்டெடுக்கவும் வேறுவழியின்றிப் போராடுவதற்கும் வற்புறுத்தப்பட்டுள்ளனர். ஆனால், இத தேச நிர்மாண, தேசிய பண்பாட்டு உருவாக்கத்திற்கான புரட்சியில் தமிழர்கள் அனைவரும் ஒருமுகப்பட்டு தீர்க்க தரிசனத்தோடு செயற்பட்டுள்ளோமா? என்பது முக்கியமானது.

தேச உருவாக்கத்தில் அனைத்து வர்க்கங்களும் ஒன்றுபட்டு புரட்சியை நடத்தவேண்டும். அதன்பொருட்டே தமக்குரிய தேசியத்தன்மை வாய்ந்த பண்பாட்டை உருவாக்கிக் கொள்ள முடியும். பண்பாட்டு உருவாக்கத்தின் மூலமே தேச உருவாக்கத்தின் முழுமை சாத்தியப்படும். தேசிய பண்பாட்டு உருவாக்கத்தில் அதன் கூறுகளாக அரும் பொருள்கள் தொழிற்படுகின்றன.

> “…வரலாற்றுத் தனித்துவம், இருப்பு நிலை, பண்பாட்டு வாழ்வியல் தனித்துவங்களைக் கொண்டு வாழ்ந்துவரும் இனங்களுள் தமிழ் இனமும் ஒன்று. ஆனால், அது தன் இனத் தொடர்ச்சியையும் பாரம்பரியத்தையும் பேணுவதில் - பாதுகாப்பதில் - உறுதிசெய்வதில் ஆத்மார்த்தமாகத் தன்னை ஈடுபடுத்தியுள்ளதா என்பது விவாதத்துக்கும் வேதனைக்கும் உரிய கேள்வியாகும்…”

கோயில்கள், அரண்மனைகள், தேவாலயங்கள், வீடுகள் முதலியவை எமது இனத்தின் தேசிய பண்பாட்டுச் சுட்டிகளாக அமைகின்றன. அவை தாங்கி நிற்கும் நிலைகள், கதவுகள், ஜன்னல்கள், சிற்பங்கள், வாகனங்கள், மட்பாண்டங்கள் முதலியனவும் எம் மக்களில் உற்பத்தியில், வாழ்வியலில் பிணைந்து கிடந்த கதிரைகள், கட்டில்கள் வேலைப்பாடமைந்த மேசைகள், ஸ்ரூல்கள், மான்கொம்புக் கதிரைகள், பூட்டுக்கள், திறப்புக்கள், கல்லாலான நீர்ப்பீலிகள், பேணிகள் முதலியன அரும் பொருள்களாக விளங்குகின்றன. இவை எந்தக் காலத்திற்குரியனவோ அந்தக் காலத்தின் உற்பத்தியாகவும் அந்தக் காலத்தையே உற்பவிப்பவையாகவும் அமைகின்றன.

இந்த அரும்பொருள்கள் எமது பண்பாட்டுக் கூறுகள், தமிழ்த்தேசிய இனத்தின் இலச்சினைகள் நீண்ட எமது வரலாற்றின் பதிவுகள், தமிழ் மானிடத்தின் உணர்ச்சிபூர்வமான அர்த்தத்தின் குறியீடுகள், அநுபவங்களும் உணர்வுகளும் கற்பனைகளும் சிந்தனைகளும் தடம்பதித்துச் செதுக்கிய மொழியுமாகும். இதனால்தான் இவை எமது தேசிய பண்பாட்டின் வளத்தையும் வளர்ச்சியையும் எடுத்துணர்த்தும் உயர்ந்தபட்ச சான்றுகளாக அமைகின்றன.

இவை ஒரு குறிப்பிட்ட அடித்தளத்தைச் சாராது தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றுக்காலம் முழுவதினதும், பல நூற்றாண்டுகள் காலமாக தமிழ் சமூகத்தினரிடையே நிலவிவந்த பல்வேறு பொருளாதார அடித்தளங்களின் வரலாறு முழுவதினதும் பெறுபேறுமாகும். பல்லாயிரக்கணக்கான ஆண்டு கால உழைப்பும் நம்மிடம் கொண்டு வந்து சேர்த்த சிந்தனைக் களஞ்சியங்கள் இவை. அவற்றில் என்றும் அழியாத மதிப்புடைய அம்சங்கள் உள்ளன. அவற்றை நாம அழிய விடக்கூடாது. அவற்றின் மதிப்புப் பற்றிய உணர்வு நம்மிடம் இல்லாமற்போனதும் போவதும்தான் துரதிர்ஷ்ட வசமானது. இது பூர்ஷ்வா, வணிக முதலாளிய ஆட்சிகள் ஏற்படுத்திய சீரழிவின் முக்கிய அறிகுறிகளாகும். இவர்களின் பார்வையில் அனைத்தும வணிகப் பொருள்களும போர்க் கருவிகள்தான். கருத்துத் தொடர்பு பூதாகார வடிவெய்தி அதிகாரத்துக்குச் சேவை செய்கிறது. நுகர்பொருள் வாணிப கலாசாரம் மக்களின் கனவையும் நனவையும் ஆழ்கிறது. இதுதான எமது அரும் பொருள்களின் அழிவுக்கான உடனடிச் சாத்தியங்களை உருவாக்கியுள்ளது.

சமாதான உடன்படிக்கையின் மூலம் உண்டான சாதகமான சூழலைப் பயன்படுத்தி பெருக்கெடுத்தோடும் வணிக கலாசார வெள்ளத்தில் யாழ்.மேட்டில் போலிகள் வந்துகுவிய எமது அரும்பொருள்கள் அள்ளுண்டு போகின்றன. காலனித்துவ நெருக்கீடுகள் நிறைந்த காலத்தில்கூட பேணிக்காத்த இவ்வரலாற்று அரும் பொருள் பொக்கிஷங்கள் கடுகதியாய் கைநெகிழ்ந்துபோவது ஒரு தற்செயல் நிகழ்வல்ல. இதனை ஒரு திட்டமிட்ட பண்பாட்டு அழிவு முயற்சியாகவே கொள்ளவேண்டும்.

றப்பர் மெத்தைகள், குசன் கதிரைகள், பிளாஸ்ரிக் பொருள்கள், பொலீத்தீன் சுருள்களுடன் யாழ் மண்ணின் உள்நுழையும் வாகனங்களும், வணிக முதலாளிய அருவருடிகளும் மனுக்குலத்தின், பண்பாட்டின், இயற்கைச் சூழலின் நஞ்சுகளை இங்கு விதைத்துவிட்டு விலைமதிப்பற்ற எமது பண்பாட்டின் ஜீவசாட்சியங்களாக விளங்கும் அரும்பொருள்களைக் கையகப்படுத்திக்கொண்டு செல்கின்றனர்; இதற்கு எமது மக்களின் பொருளாதார நிலை, அழகியல், தேசியம், வரலாறு, பண்பாடு பற்றிய விழிப்புணர்ச்சியின்மை பழைமை பற்றிய காழ்ப்பு, பண்பாட்டுத் தூய்மை வாதம், புதுமை மோகம், போர்கள், இடப்பெயர்வுகள், அரும்பொருள்கள் குறித்த சட்டங்களின் இயலாமை முதலியன காரணமாகி விடுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி எமது பண்பாட்டு அடையாளங்களை அழித்தும் கையகப்படுத்தியும் வருகின்றவேளையில் எம்மவர்களும் கைக்கூலிகளாகத் தொழிற்படுவதும் சோரம்போய் காட்டிக்கொடுப்பதும், வசதி படைத்த சிலர் பெரும் லாபம் ஈட்டுகின்ற தொழிலாக மேற்கொண்டுவருவதும் வெட்கப்பட வேண்டியதும் வருத்தப்பட வேண்டியதுமான அருவருக்கத்தக்க செயல்களாகும்.

A-9 தரைவழிப் பாதை திறந்தவுடன் உக்கிரமடைந்திருக்கும் இந்த ஏமாற்று, மோசடி வியாபாரம் அதற்கு முன்னரே குடாநாட்டில் சில நிறுவனங்களின்மூலமும், தனி நபர்கள் மூலமும், சில குழுக்கள் மூலமும் மேற்கொள்ளப்பட்டு வந்தமை தெரியவருகிறது.

**க.அருந்தாகரன்**

அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையினர் இந்த அரும் பொருள்களின் பண்பாட்டு வரலாற்று அருமைப்பாடு, முக்கியத்துவத்தை எடுத்து விளக்கி, இவை பேணப்படுவதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து இந்த ஏமாற்று வியாபாரத்துக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தடை விதித்துள்ளனர். அத்துடன் பிரதேச ரீதியாகச் சென்று மக்கள் மத்தியில் இது குறித்த விழிப்புணர்வையும் நுண்கலைத்துறையினர் ஏற்படுத்தி வருகின்றனர். இவை நல்ல உற்பாதங்களாகத் தென்பட்டபோதும் தொடர்ந்தும் கப்பல்மூலமும், தீவகங்களுடாகவும் இப்பொருள்கள் கடத்திச் செல்லப்படுகின்றன என்பது தெரியவருகின்றது. இது எமது பண்பாடு, வரலாறு குறித்த பேராபத்தையும் அச்சத்தையும் தோற்றுவித்துள்ளதோடு; எதிர்காலம் பற்றிய கேள்வியையும் உருவாக்கியுள்ளது. இது தமிழர்களாகிய நாம் அனைவரும் ஒன்றுபட்டு சிந்தித்து செயலாற்றவேண்டிய வரலாற்றுப் பொறுப்பையும் உணரச் செய்துள்ளது.

புரட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்பே பண்பாட்டு வளர்ச்சி நடைபெறத் தொடங்கவேண்டும். அது தன் மேலாண்மையையும் நிறுவப்பாடுபடவேண்டும். அதற்குத் தேசிய மக்கள் சித்தத்தை உருவாக்கவேண்டும். இப்புதிய பண்பாட்டை உருவாக்குவதற்கு நாட்டார் இலக்கியங்கள், கலைகள் பண்பாட்டுக் கூறுகள், அரும் பொருள்கள் முதலியவற்றை விமர்சன ரீதியாகப் புரிந்துகொண்டு அவற்றிலிருந்தே தொடங்கவேண்டும். தேசிய மக்கள் சித்தத்தை உருவாக்குவதன் பொருட்டு கட்சிகள், கல்வி நிறுவனங்கள், பத்திரிகைகள், ஏனைய தொடர்பாடல் ஊடகங்கள் தொழிற்படவேண்டும். இதன் உடனடி வரலாற்றுத் தேவையாகவும் கடமையாகவும் அரும்பொருள் பொக்கிஷங்களை மீட்டெடுத்தல், பாதுகாத்தல் அமைகிறது.

புரட்சிகர மேலாண்மையை உருவாக்குவதும் தேசிய மக்கள் பண்பாட்டை உருவாக்குவதும் எமது தேசிய இன உருவாக்கத்தின் பிரிக்க இயலாத அம்சங்களாகும். தேசிய மக்கள் பண்பாட்டை உருவாக்குவதில் அரும் பொருள்கள் அரும்பணியாற்றுகின்றன. அரும் பொருள்களைச் சேகரிப்பது, பாதுகாப்பது தேசியக் கலைகள் வளரவும், தேசிய உணர்வுகள் உருவாகவும் வழிகோலுகிறது. அத்தோடு பரந்துபட்ட மக்கள் உலகக்கண்ணோட்டம் பற்றிய புரிதலை உருவாக்கவும் வழிகோலுகிறது. இறந்தகாலத்தை நிகழ்காலப்படுத்தி எதிர்காலத்துக்கு எடுத்துச்செல்லும் வரலாற்றுப் பணியை நிறைவு செய்யவும் உதவுகிறது.

இத்தகைய தமிழ் இன, மொழி, கலை, கலாசார, பண்பாட்டு வரலாற்று முக்கியத்துவம் கொண்ட அரும் பொருள்கள் கைநெகிழ்ந்துபோவதை அனுமதிக்கக்கூடாது. தேசியப் பிரக்ஞை அற்று இவற்றை அழியவும், அழிக்கவும் துணைபோவோமேயானால் எமது இனத்தின் வரலாற்றையும் சுய பண்பாட்டுப் பெறுமானங்களையும் இன அடையாளத்தையும் இல்லாமல் செய்தவர்கள் நாமே என்ற வரலாற்றுத் தவறுகளை இழைத்தவர்களாவோம். இதனைக் கருத்திற்கொண்டு எமது அரும்பொருள் பொக்கிஷங்களைப் பேணி, எதிர்காலத்துக்கு வளமான பண்பாட்டு அடையாளங்களையும் வரலாற்றுத் தொடர்ச்சியையும் விட்டுச் செல்வோம். ★

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

பிறப்பு 1953 - 07 - 20



இறப்பு 2002 - 08 - 21

"பொற்பதி" - குடத்தனையைச் சேர்ந்த

### திருமதி அனுலாவதி (காந்தி) தர்மசேனா

*வாழ்ந்த உறவையெல்லாம்*
*அன்புடன் அரவணைத்து*
*அன்பெனும் உணர்வையூட்டி*
*பகிர்ந்து அளித்துவந்த*
*பாசம் மிகுந்த எம் அன்னையே!*
*உங்கள் அரவணைப்பைத் தேடுகையில்*
*எமைவிட்டு காலன் பிரித்தெடுத்ததேனோ?*
*காலன் உங்களைப் பிரித்தாலும்*
*உங்கள் இன்புறும் வதனத்தை*
*மறக்கமுடியுமா? எம் உயிர் உள்ளவரை*
*மறுபிறப்பில் மீண்டும் இணைவோம்*
*எம் பாசமிகு அன்னையுடன்.*

**2002.08.21 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்தவர்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து எமக்கு அனுதாபம் தெரிவித்து, ஆறுதல் கூறிய அனைவருக்கும் நாம் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.**

பிரிவால் துயருறும்:
கணவர்: தர்மசேனா *(பொற்பதி)*,
மகன்: [illegible]தன் *(ஹொலண்ட்)*,
மகள்: க.[illegible]ந்தமாலா *(கொழும்பு)*,
மகன்: பிய[illegible]ந்தன் *(பொற்பதி)*,
மகள்: காமினி *(லண்டன்)*,
மகள்: சீறிநிமலி *(லண்டன்)*.

*"பொற்பதி", குடத்தனை.*

## நீங்கா நினைவில் ஓராண்டு நினைவலைகள்



தோற்றம் [illegible] 09.1939

மறைவு 01.10.2001

அமரர்

### கணபதிப்பிள்ளை கணேசமணி

(B.Sc.Hons)

(முன்னாள் ஆசிரியர் யாழ். மத்திய கல்லூரி)

திதி: 20-09-2002

**எங்கள் இதயத்தில் நிறைந்திருக்கும்**
**எம் இனிய அப்பாவே - நீங்கள்**
**இவ்வுலகை விட்டோராண்டு ஆனாலும்**
**மாறிடுமோ எம் துயரம் மறைந்திடுமோ உங்கள் முகம்.**
**கண்ணின் கருமணி போல்**
**எமை வளர்த்த தெய்வமே!**
**இன்றுங்கள் அன்பு அரவணைப்பும்**
**எங்குதான் போனதப்பா!**
**வழிந்தோடும் விழிநீரில்**
**எங்கள் விழிதேடும் உங்கள் முகம்**
**விழிதேடும் இடமெல்லாம்**
**விம்பமாய் தோன்றுதப்பா!**
**உயிருள்ளவரை என்றும்**
**உங்கள் நினைவிருக்கும்**
**அந்த இனிய நினைவதில்**
**உங்கள் அன்பு முகம் என்றும் நிலைத்திருக்கும்.**

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

ஈரவிழிகளுடன்:
**மனைவி, பிள்ளைகள்.**

(3414)

# இந்திய இறக்குமதிகளுக்கு நிகராக துணிகளுக்கு சாயம்பூசும் கலை உள்ளூரில்

*கேள்வி:* துணிகளுக்கு சாயம்பூசும கைத்தொழிலில் நீங்கள் நீண்ட தூரத்தைக் கடந்திருக்கிறீர்கள். அதில் உங்கள் தந்தையாரின் பங்கு மற்றும் உங்கள் தொழில் பற்றி சற்றுக் கூறுவீர்களா?

*பதில்:* அறுபது ஆண்டுகளுக்கு முன் எனது தந்தையார் கையால் துணிக்குச் சாயம் பூசும் தொழிலை ஆரம்பித்தார். அவர் தானே அச்சுக்களை தேக்குப் பலகையில் வடிவமைத்தார். அப்போது மரச் சாயங்களையே பயன்படுத்தினோம். அவை நீடித்து நிலைத்திருக்கக் கூடியவையல்ல. 6 அல்லது 8 மாதங்களில் துணிகள் வெளுத்துவிட்டன. இவை எனக்கு பெரும் பிரச்சினையாகிவிட்டது. இச்சந்தர்ப்பத்தில் ஹெய்லீஸ் நிறுவனம் முன்வந்து எமது பிரச்சினையைத் தீர்த்தது. மரச்சாயங்களுக்குப் பதிலாக இரசாயனப் பதார்த்தங்களைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தியது. நாம் அதனைப் பின்பற்றினோம். அதற்கு மேல் பொஸ்பேற்று போன்ற இரசாயனப் பதார்த்தங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. மீண்டும் பிரச்சினைகள் ஆரம்பமாகின்றன. மெதுவாக எமதுகைத்தொழில் பின்னடைவு கண்டது.

*கேள்வி:* உங்கள் தொழில் பின்னடைவை நோக்கியபோது உங்களிடம் எத்தனை ஊழியர்கள் தொழில் புரிந்தனர்? மேலும் அதுபற்றிய விவரங்களைக் கூறுங்கள்....?

*பதில்:* 600 அறைகளில் சாயம் பூசப்பட்டது. அவற்றில் எம்முடன் 20 பேர்வரை தங்கியிருந்து வேலை செய்தனர். 200 பேர்வரை தமது வீடுகளில் இருந்தவாறே வேலை செய்தனர். அக்காலப் பகுதியில் எனது சகோதரருக்கு ஹெய்லீஸ் நிறுவனம் புலமைப் பரிசிலொன்றை வழங்கி இந்தியாவிற்கு அனுப்பியது. இத்துடன் ஐ.ஸி. மற்றும் பவர்ஸ் நிறுவனங்கள் எனது சகோதரனுக்கு பயிற்சியளித்து ஊக்குவித்தன. அதன்மூலம் எமது தொழிலை மேலும் விரிவுபடுத்தினோம். ஆரம்ப காலங்களில் கையினால் அச்சுப்பதித்த ஆடைகளுக்கு நல்ல சந்தை வாய்ப்பு இருந்தது. ஆனால், திறந்த பொருளாதாரத்தின் தலையீடு எமது கைத்தொழிலைப் பாதித்தது. கையால் அச்சுப்பதிக்கும திறமை உள்ளவர்கள் தற்போது அருகிவரும்போதும் அரசு எமக்கு உதவினால் தொழிலுக்கு வேண்டியவர்களைப் பயிற்றுவித்துக் கொள்ளலாம். அதன்மூலம் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யும் துணிகளை விட சிறந்த தரமுள்ள துணிகளை எம்மால் தயாரிக்கமுடியும்.

*கேள்வி:* இந்தியாவில் இந்தக் கைத்தொழில் புடைவைகள் மலிவு விலையிலுள்ளனவே. அதற்கு விளக்கமளிக்கமுடியுமா?

*பதில்:* அங்கு மனித வளம் மலிவாகக் கிடைக்கின்றது. அது ஒரு மிகப் பெரிய நாடு. அதனால் தொழிலாளர்களுக்குப் பற்றாக்குறை ஏற்படுவதில்லை. அத்துடன் இந்தியாவில் பருத்தி உற்பத்தியும் நடைபெறுகிறது. இலங்கையிலும் தொழிலாளர்கள் கிடைக்கிறார்கள். ஆனால், பொருள்களின் விலை மிக அதிகமாக உள்ளது. இதனால் இந்தியா சந்தையுடன் போட்டிபோடுவது சற்றுக் கடினமானது. ஆனால் தரத்திலுயர்ந்த பொருள்களை எம்மால் கொடுக்கமுடியுமென்று நான் உறுதியாகக் கூறுவேன்.




ரீ.என்.எல். தொலைக்காட்சியில் நேருக்குநேர் நிகழ்ச்சியில் 'உமர்தீன் அன் சன்ஸ்' மற்றும் 'பட்டிக்கலோ சாரி பிறண்டிங்' ஆகிய நிறுவன நிர்வாக முகாமையாளர் உமர்தீன் அப்துல் வஹாப்பை (இடது கோடியில் அமர்ந்திருப்பவர்) அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்கிரம, தொழிலதிபரும் சிலின்கோ குருப் கம்பனிகளின் தலைவருமான தேசமான்ய லலித் கொத்தலாவை ஆகியோர் மொழிபெயர்ப்பாளர் துணையுடன் செவ்வி.

## வர்த்தக ஸ்பெஷல் நேருக்குநேர்

ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 17ஆம் திகதி தோன்றித் துணிகளுக்குச் சாயம பூசும் தனது தொழிலின் வெற்றி அனுபவம் மற்றும் பிரசினைகள் பற்ற நேயர்களுடன் பகிர்ந்து கொண்டார் உமர்தீன் அப்துல் வஹாப்.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் துணிகளுக்கு நிகரான விதத்தில், துணிகளுக்கு சாயம் பூசும் கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறார் மட்டக்களப்பு காத்தான்குடியைச் சேர்ந்தவரான உமர்தீன் அப்துல் வஹாப்.

1947ஆம் ஆண்டில் கைகளால் துணிகளுக்கு அச்சுப் பதித்து சாயம் பூசும் கைத்தொழிலை அப்துல் வஹாபபின் தந்தையார் ஆரம்பித்தார். உள்நாட்டு யுததம் மற்றும திறந்த பொருளாதாரத்தினால் இக் கைத்தொழில் பாதிப்படைந்தது. இருப்பினும், தளராத தனது முயற்சியால் தொழிலைத் தக்கவைத்திருக்கிறார் அப்துல் வஹாப்.

மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியிலும் காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்திலும் தனது ஆரம்பக் கல்வி யைப் பெற்றார். பின்னர் கொழும்பு அக்குவைனாஸ் உயர் கல்வி நிறுவனத்தில் டிப்ளோமா பட்டம் பெற்றார். தற்போது அவர் "உமர்தீன் அன்ட் சன்ஸ்" மற்றும் "பட்டிக்கலோ ஸாரி பிரீன்டிங்ஸ்" ஆகிய நிறுவனங் களின் நிர்வாக முகாமையாளராக உள்ளார்.

இவருடைய கைத்தொழில் உற்பத்திகள் கொழும்பில் உள்ள பிரதான வெளிநாட்டு வாடிக்கையாளர்கள் வரும் கடைகளில் விற்பனைக்குக் கிடைக்கின்றன.

தொலைக்காட்சியில் உமர்தீன் வஹாப்பை 113 கம்பனிகளைக் கொண்ட செலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேச மான்ய லலித் கொத்தலாவலையும் அறிவிப்பாளர் சமுதிக சமர விக்கிரமவும் செவ்வி கண்டனர். அதனை இங்கு படித்துப் பாருங்கள்.

இதனால் அரசு எமக்கு உதவி அளித்தால் இத்தொழிலை கிழக்கு மாகாணத்தில் விருத்தி செய்யமுடியும். வடக்கு - கிழக்குப் பிரச்சினைகளின்போது எமது கைத்தொழிலுக்கு ஓர் அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டது உண்மை. ஆனால், இந்தப் பின்னடைவுக்குத் திறந்த பொருளாதாரமே முக்கிய காரணம் என்று கூறுவேன். இவ்வாறான பொருளாதார மாற்றங்கள் ஏற்படும்போது எமது உள்ளூர் கைத்தொழிலாளர்களைப் பாதுகாக்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

*கேள்வி:* இந்தியாவுடன் போட்டி போடக்கூடிய ஒரு கைத்தொழில் இன்று பின்னடைந்துள்ளதால் 2,00,000 தொழிலாளர்கள் பாதிப்படைந்துள்ளனர். இது ஒரு பாரிய பாதிப்பு. இவ்விடயம் பற்றி மேலும் விளக்கமுடியுமா?

*பதில்:* இங்கு ஒரு முக்கிய விடயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். கொழும்பில் இவ்வாறான ஒரு கைத்தொழிலை ஆரம்பிப்பதானால் பாரிய கட்டட இட வசதி தேவை. ஆனால், கிராமத்தில் அப்படியல்ல. தொழிலாளர்கள் தமது வீடுகளுக்கு பொருள்களை எடுத்துச்சென்று தொழில் செய்வர்.

*கேள்வி:* அரசிடம் இருந்து நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?

*பதில்:* இந்தக் கைத்தொழில்மூலம் அதிகளவு வெளிநாட்டு வருமானங்களைப் பெற்றுக்கொள்ளலாம். நான் கொழும்பிலுள்ள உல்லாசப்பிரயாணிகள் அதிகம் வரும் கடைகளுக்கு எனது பொருள்களை விநியோகிக்கிறேன். வெளிநாட்டவர்கள் அவற்றை விரும்பி வாங்குகிறார்கள். அரசோ அல்லது ஏதேனும் அமைப்புக்களோ எமக்கு உதவினால் எனது இத்தொழிலை மேலும் விரிவுபடுத்துவேன். எவ்வளவோ சாதிக்கலாம்.

மேலும், முக்கியமான ஒரு விடயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நேருக்கு நேர் நிகழ்ச்சியைப் பார்த்த பின் சிலிங்கோ நிறுவனத்தின் கிராமிய கைத்தொழில் மையத்திற்குச் சென்று பார்வையிட்டேன். அவர்கள் பொருள்களை எதுவித லாபமும் பெறாமல் விற்பனை செய்வதை அறிந்தேன். அவர்களின்மூலம் நான் தேசமானிய கொத்தலாவல அவர்களைத் தொடர்பு கொண்டேன்.

*கேள்வி:* அரசு உங்களது கைத்தொழிலை பாதுகாத்தால் எவ்வாறான திட்டங்களை நீங்கள் முன்வைப்பீர்கள் என்று கூறமுடியுமா?

*பதில்:* நிச்சயமாக இவ்வாறான ஓர் உதவி கிடைக்கும் பட்சத்தில் தரமான பொருள்களை எம்மால் அதிகளவு உற்பத்தி செய்யமுடியும். ★

# ஜனசக்தியின் ஒளி இப்போது யாழ்ப்பாணத்தில் பிரகாசிக்கின்றது

இலங்கையில் அதிவேகமாகவும புதிய வழிமுறைகளிலும் வளர்ந்து வருகின்ற காப்புறுதி நிறுவனமான ஜனசக்தி காப்புறுதி கம்பெனி லிமிடெட் (JICL) தனது 86 ஆவது கிளையை அண்மையில் யாழ்ப்பாணத்தில் திறந்துள்ளது. காப்புறுதித் துறையில் கூடுதலான பலாபலன்களைக் கொண்டதும், யாழ்.குடாநாட்டில் அணுகப்பட்டதுமான பல சந்தை வாய்ப்புகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்குடனேயே இக்கிளை ஆரம்பிக்கப்பட்டது. சமாதான முன்முயற்சிகள் பலப்படுத்தப்படுவதினால், கொள்வனவு விகிதமும் விற்பனை வருமான விகிதமும் அதிகரிக்கக் கூடிய விதத்தில் அப்பகுதியில் குறிப்பிடத்தக்களவு பொருளாதார வளர்ச்சிக்கு வழியேற்பட்டுள்ளது. இப்பின்னணியில் சிறு கைத்தொழில்களின் வளர்ச்சி, பொதுவாகக் காப்புறுதி வியாபாரத்தில் சிறப்பான நன்மைகளுக்கு வழிவகுத்ததுடன் ஜனசக்தியின் ஆயுள்காப்புறுதித்துறை வியாபார வளர்ச்சிக்கும் கூடுதலான சந்தர்ப்பங்களை யாழ்ப்பாணம் வழங்குகின்றது.

இந்நகர்வு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கம்பெனியின் நடவடிக்கைகளை விஸ்தரிக்கச் செய்ததுடன் மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, கல்முனை ஆகிய இடங்களையும் உள்ளடக்கிய விதத்தில் நாடு முழுவதிற்குமான வியாபித்த கிளை வலையமைப்பையும் மேன்மேலும் பலப்படுத்துகின்றது. ஆயுள்காப்புறுதி நடவடிக்கைகளுக்காக 'ISO 9002' அங்கீகாரத்தைப் பெற்றுள்ள கம்பெனியுமான ஜனசக்தி யாழ்ப்பாணத்தில் தரமான புதிய சேவைகளை காப்புறுதித் துறையில் உருவாக்கவேண்டியுள்ளது.

ஜனசக்தியினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதித் திட்டங்கள் காப்புறுதித்துறையில் முன்னோடியான திட்டங்களாக விளங்குகின்றன. சாந்தி, கீதாஞ்சலி, ஜீவன்வந்தனா, சேமிப்பு ஓய்வூதியத் திட்டமான விஷ்ராம, சுவசக்தி ஆகிய ஜனசக்தி காப்புறுதிகள் குறைந்த தவணைப் பணத்தையும் ஆகக் கூடிய நன்மைகளையும் கொண்டவை. நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ளது போன்று யாழ்ப்பாண மக்களின் ஒவ்வொரு தேவைகளுக்கும் ஏற்ற விதத்தில் இவை அமைந்துள்ளன. வாகனங்கள், விபத்து, வியாபாரம், வீடுகள், கடற்போக்குவரத்து, கலவரம், வேலை நிறுத்தம், பொறியியல், தனிப்பட்ட விபத்து, சுகாதாரம், மருத்துவமனை சிகிச்சை போன்ற வியாபித்த பொதுக் காப்புறுதிகளையும் ஜனசக்தி வழங்குவதுடன், மருத்துவமனை காசுத் திட்டமொன்றையும் புதிதாக செயற்படுத்துகின்றது. எல்லாவிதமான இப்புதிய வழிமுறைகளின் மூலம் புதிய வாடிக்கையாளர்களை வென்றெடுத்தது மாத்திரமல்லாமல் தொடர்ந்தும் இந்நன்மைகளை அனுபவிப்பதற்கு கம்பெனியுடன் அவர்கள் இணைந்திருப்பதையும் உறுதிப்படுத்தியுள்ளது.

2001 டிசெம்பர் 31ஆம் திகதி முடிவுற்ற நிதியாண்டில் 100கோடி ரூபாவுக்கு கூடிய தவணைப் பண வருமானத்தைப் பெற்றுள்ள ஜனசக்தி, நல்லதொரு கூட்டுப்பிரஜையாக ஆவதற்கான தனது ஈடுபாடுகளில் ஓர் அங்கமாக பல முன்முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்கும், ஊழியர்களுக்கும், பங்குதாரர்களுக்கும், பொதுவாக நாட்டுக்கும் சிறந்ததும், தொடர்ச்சியானதுமான பெறுமானங்களை வழங்கும் அதேவேளை, விவேகமான முகாமைத்து வத்துடனும், சிறந்த கம்பெனி ஆட்சித் திறனுடனும் சமூகத்திற்குப் பொறுப்பு வாய்ந்ததொரு கம்பெனியாக ஜனசக்தி தனது பிரதிமையையும் நற்பெயரையும் மேம்படுத்தியுள்ளது. ★

## தொழில் வளம்




க்ளோகாட் விசேட சலுகையின் 2ஆவது பரிசினை வென்ற சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி வீ.நரேந்தர் குடும்பத்தினர் அவர்களின் க்ளோகாட் விற்பனையாளரான சுன்னாகத்தைச் சேர்ந்த நாதன் பிரதர்ஸ் நிலைய உரிமையாளர் ஆகியோர் தங்கள் பரிசுகளுடன் காட்சியளிக்கின்றனர்.

# உயர்தொழில் நுட்ப நிறுவனம் ஊடாக டிப்ளோமா சான்றிதழ்களை பெறலாம்!

## 'உதயன்' செய்திக்குப் பிரதிப் பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் 1997ஆம் ஆண்டுவரை கற்ற பினனர் யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் இணைக்கப்பட்ட மாணவர்களில் இறுதிப்பரீட்சையில் சித்தயடைந்தவர்கள் யாழ் உயர் தொழில் நுட்ப நிறுவனத்தினூடாக தமது மூலச்சான்றிதழைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தொழில் நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள வலயம் நான்கின் பிரதிப பிராந்தியப் பணிப்பாளர் ந.யோகராஜன்.

டிப்ளோமா சான்றிதழ்களைப் பெறுவதில் மாணவர்களுக்கு ஏற்படும் சிரமம் குறித்து கடந்த 18ஆம் திகதிய உதயனில் 'பட்டச் சான்றிதழ் பெறுவதில் அலைக்கழியும் மாணவர்கள் - உடன்நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை' என்ற தலைப்பில் பிரசுரமான செய்தி தொடர்பாக அளித்த விளக்கத்திலேயே பிரதிப் பிராந்தியப பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவருடைய விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் 1997ஆம் ஆண்டுவரை நடத்தப்பட்ட கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா, உயர் தேசிய வணிகவியல் டிப்ளோமா, வணிகக் கற்கைகளினான தேசிய டிப்ளோமா - கணக்காய்வு, வணிகக் கற்கைகளிலான தேசிய டிப்ளோமா - கிரயம் ஆகிய பயிற்சி நெறிகள் அரசின் புதிய திட்டத்திற்கமைய உருவாக்கப்பட்ட யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு மாற்றப்பட்டு மாணவர்கள் அந்நிறுவனத்தில் இணைக்கப்பட்டனர். பின்னர் 1997ஆம் ஆண்டு இறுதிப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடத்தப்பட்டது. அப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதேசமயம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் 11/07 இலக்க திகதியிட்ட 04.04.2002 கடிதத்தின் மூலம் பிரதிப் பரீட்சை ஆணையாளர் யாழ்.தொழில் நுட்பக் கல்லூரி அதிபரை, இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் சான்றிதழ்களை மாணவர்களிடம் ஒப்படைக்க முன்னர் அதில் முரண்பாடுகள் இருப்பின் தனக்கு அறியத்தரும்படி கேட்டுள்ளனர்.

இந்நிலையில், இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபரினால் வழங்கப்பட்ட முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் வருடங்களில் சித்தியடைந்த சான்றிதழ்களையும், யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்பட்ட மாணவர் அடையாள அட்டையையும், உயர் தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளரிடம் நேரடியாக ஒப்படைத்து, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தமது இறுதிவருட(4ஆம் வருட) சித்தியெய்திய மூலச் சான்றிதழை அவரிடம் உறுதிசெய்து பெற்றுக்கொள்ளமுடியும்.

முதலாம், இரண்டாம், மூன்றாம் வருடம் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் சித்தியெய்திய, சான்றிதழ்களை பெறத்தவறிய மாணவர்கள் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்பட்ட மாணவர் அடையாள அட்டையை யாழ். உயர் தொழில்நுட்பப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கவும். பின்னர் யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்புகொள்ளுமிடத்து உடன் விபரங்களை சரிபார்த்து சான்றிதழை உறுதிப்படுத்திக் கொடுக்க யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபரும், பதிவாளரும் தயார் நிலையில் உள்ளனர். இதன் பின்னர், மாணவர்கள் தமது மூலச் சான்றிதழ்களை யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்திடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் - என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# புராதன சின்னங்களை பாதுகாக்கும்படி வலியுறுத்து

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்ப்பாணத்திலுள்ள புராதன-வரலாற்றுச் சின்னங்களைப் பேணுவதற்கு மாநகரசபை நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.மாநகரசபை உறுப்பினர் எஸ்.முகுந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள யமுனா ஏரி, சங்கிலியன் தோப்பு மற்றும் மந்திரிமனை போன்ற வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் - சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய இந்த வரலாற்றுச் சின்னங்கள் பேணப்படுவது அவசியமானதாகும் என்றும் யாழ்.மாநகர சபைக் கூட்டத்தில் அவர் வலியுறுத்தினார். (ஒ-9)

# ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆக்கத்திறன் போட்டிகள்

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு ஆக்கத்திறன் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கிளிநொச்சியில் இயங்கும் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையும், தமிழ் வளர்ச்சிக் கழகமும் இணைந்து இந்தப்போட்டியை நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளன.

எதிர்வரும் ஒக்ரோபர் 6ஆம் திகதி உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்படவுள்ளது. இதனை முன்னிட்டு வடகிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மொழிமூல ஆசிரியர்களின் தமிழ் மொழி எழுத்தாக்கத்திறனை மேம்படுத்துவதற்காகவும் - மேம்படுத்தலுக்கான ஊக்குதலை வழங்குவதற்காகவும் - தூய தமிழ்பண்பாட்டு அறிவை மேம்படுத்துவதற்காகவும் 'தமிழ் மொழி எழுத்தாக்க ஆக்கத்திறன் போட்டி' நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப்போட்டி எதிர்வரும் 29ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். வடகிழக்கு மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களால் குறித்தொதுக்கப்படும் நிலையங்களில் இப்போட்டிகள் நடைபெறும். போட்டி நிலையங்களையும் வலயக் கல்விப் பணிமனைகளே ஒழுங்குபடுத்தும். (ஒ-117-ரி)

# செய்திக் கொத்து

### சித்தாந்த பண்டிதர் பரீட்சை விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்.சைவபரிபாலன சபையினரால் வருடந்தோறும் நடத்தப்படும் சைவசித்தாந்த பண்டிதர் பட்டப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சித்தாந்த பிரவேச பண்டிதர், சித்தாந்த பாலபண்டிதர், சித்தாந்த பண்டிதர் என மூன்று பிரிவுகளாக அடுத்த வருடம் மே மாதம் முதல்வாரத்தில் பரீட்சைகள் நடைபெறும் என்றும் -

பரட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் அது தொடர்பான விண்ணப்பப்படிவங்களை இல.66, கல்லூரிவீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும் என்றும் - அவர் அறிவித்துள்ளார். (எ)

### கட்டடத்தொகுதி திறப்புவிழா

தென்மராட்சி,செப்.20

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் பருத்தித்துறை முதலாம் குறுக்குத்தெருவில் பல லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சங்கத் தலைமை அலுவலகம், பிரதான களஞ்சியம் மற்றும் லொறிகள் தரிப்பிடம் ஆகியவை எதிர்வரும் புதன்கிழமை காலை 10 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு இவற்றைத் திறந்துவைப்பார். (ஒ-117)

### நெடுந்தீவில் மீண்டும் பொலீஸ் நிலையம்

நெடுந்தீவு,செப்.20

சுமார் 28 வருடங்களுக்குப் பின்னர் நெடுந்தீவில் மீண்டும் பொலீஸ் நிலையம் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் இயங்கத் தொடங்கியுள்ளது.

பொலீஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி லால் ஹெட்டியாராய்ச்சி தகவல் தருகையில், இருபத்தி ஐந்து பொலீஸ் உத்தியோகத்தர்கள் இங்கு கடமையில் இருப்பதாகத் தெரிவித்தார்.

ஏற்கனவே இங்கு இயங்கி வந்த பொலீஸ் நிலையம் 1970களில் இடம்பெற்ற ஜே.வி.பியினரின் கிளர்ச்சியை அடக்க இங்கு கடமையாற்றிய பொலீஸார் தென்பகுதிக்கு அழைக்கப்பட்டதைத் தொடர்ந்து மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-111)

### பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நியமனம்

தென்மராட்சி,செப்.20

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் உள்ள ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களுக்கென 25 பகுதி நேர ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-117)

### யாழ்நகரில் இன்று கலாசாரவிழா

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்ப்பாணம் பிரதேச கலாசாரப் பேரவை நடத்தும் கலாசார விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

திருமறைக்கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளார் இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ)

### நெடுந்தீவில் எழுத்தறிவுதினம் அனுஷ்டிப்பு

நெடுந்தீவு,செப்.20

நெடுந்தீவில் அண்மையில் எழுத்தறிவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

நெடுந்தீவு கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.அரசரத்தினம் தலைமையில் சக்கிரியாம்பள்ளம் அ.த.க.பாடசாலையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

எழுத்தறிவின் முக்கியத்துவம் குறித்து உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரானிஸ்லஸ், நெடுந்தீவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.அருளப்பு ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (எ-111)

### கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு நிதி உதவி

தென்மராட்சி,செப்.20

வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள 100 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சு நிதி உதவி வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்குடும்பங்களுக்கு வீடுகளைப் புனரமைக்க தலா 25 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வடமராட்சி கிழக்குப் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள ஒரு தொகுதி கடற்றொழிலாளர்களுக்கு ஐ.நா.அபிவிருத்தித் திட்டத்தினால் கட்டுமரங்கள் வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

### பாடசாலைகளில் மழைநீரை சேமித்து பயன்படுத்தும் திட்டம்

தென்மராட்சி,செப்.20

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் மழைநீரைச் சேமித்துவைத்துப் பயன்படுத்தும் திட்டத்தினை பிரதேசத்திலுள்ள [illegible] பாடசாலைகளில் அறிமுகப்படுத்தவுள்ளனர்.

இத்திட்டத்[illegible] வரணி மகா வித்தியாலயம், [illegible] அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவை தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஒ-117)

# கடமையில் கண்ணாக இருந்தால் கணபதியின் அருள் நிச்சயம் கிட்டும்!



செய்யும் தொழிலைத் தெய்வமாக மதித்துப் போற்றவேண்டும் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அதே போன்று கடமையில் கண்ணாக இருப்பவர்களை மூலப் பரம்பொருளான கணபதியும் நேசிப்பார் என்கிறது கீழுள்ள புராணக்கதை.

எந்தச் செயலையும் தொடங்கும் முன்னர் கணபதியை வணங்கிவிட்டுச் செல்லவேண்டும். அவ்வாறு செய்தால் அச்செயல் நமக்கு நற்பலன் கிடைக்கக்கூடியதாக அமையும். செயல்களைச் செய்யும்போது அச்செயலில் கண்ணுங்கருத்துமாக நாம் இருப்பதையே கணபதி விரும்புகிறார்.

செயலில் அசிரத்தையுடன் செயற்படுபவர்களை அவர் வெறுக்கிறார். அவருக்குக் கொட்டாவி விடுவது பிடிக்காது என்று சொல்லுகின்றனர். ஒரு நாள் பிரம்மா தன் படைத்தல் தொழிலைச்செய்து கொண்டிருந்தார். அவரையறியாமலேயே அவருக்கு அசதி ஏற்பட்டது.

தன்னை மறந்து கொட்டாவி விட்டார். அப்போது அங்கே வந்த விநாயகரைக்கூட பிரம்மா கவனிக்கவில்லை.

பிரம்மாவின் கண்கள் தூக்கக் கலக்கத்தில் இருந்ததை விநாயகர் கண்டார். உலகம் இயங்குவதற்குரிய உயிரினங்களைப் படைக்கும் பிரம்மா இப்படி அசிரத்தையாக உறங்கினால் அவரால் உயிர்களை ஒழுங்காகப் படைக்கமுடியுமா?

அச்சமயத்தில் உருவாகும் உயிர்கள் நல்ல சிந்தனையுடன் கூடிய ஒழுங்கான செயற்பாடுகள் கொண்டவையாக உருவாகுமா? யோசித்தார் விநாயகர். பிரம்மாவுக்கு இதை உணர்த்தவேண்டும் என்று முடிவு செய்தார். ஆனால், பிரம்மா விநாயகரைக் கவனித்தால்தானே! இடையிடையே கொட்டாவிவிட்டவாறு உறங்கிப் போய்விட்டார்.

பிரம்மாவை எழுப்புவதற்காக ஒரு தந்திரமொன்றைச் செய்தார் விநாயகர். பிரம்மா விட்ட கொட்டாவி

### ஞானக்கதிர்

யிலிருந்து ஓர் அசுரனை உருவாக்கினார். அசுரக் குழந்தை அழுத சத்தத்தில் பிரம்மா கண்விழித்தார்.

தன் அருகில் ஓர் அசுரக் குழந்தை அழுதுகொண்டிருப்பதைக் கண்டார். நான்தான் இவனை உருவாக்கவில்லையே பின்னர் எப்படி? அவர் யோசித்துக்கொண்டிருந்த போது அக்குழந்தை பேசியது. "தந்தையே, நான் உங்கள் கொட்டாவியில் இருந்து பிறந்தேன். நீங்கள் கலைப்படாமல் உறங்குங்கள். நான் உங்கள் தொழிலைக் கவனமாகப் பார்த்துக்கொள்கிறேன்" - என்றது.

பிரம்மாவுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. உடனே தன் மனைவி சரஸ்வதியை அழைத்து, "பார் என் வல்லமையை, நான் உறங்கும்போது விட்ட கொட்டாவியில் இருந்து இவன் பிறந்துள்ளான். இனி என் தொழிலை என் மகன் பார்ப்பான்" - என்றார்.

பிரம்மா அப்படிச் சொன்னாலும் கலைகளின் அதிபதி சரஸ்வதிக்கு ஞானம் எது; அஞ்ஞானம் எது என்று தெரியாதா? அங்கு விநாயகர் நிற்பதை அறியாது தன் கணவர் சொல்கிறார் என்பதை உணர்ந்தாள். அவரது அறியாமையை எண்ணி கலங்கினாள். பின்னர் "நீங்கள் கடமையை மறந்துவிட்டு உறங்கியதனால் வந்த வினை இது. இவனது தீமை நிறைந்த குணங்களால் ஆபத்தே தவிர ஆக்கம் விளையாது" என்றாள்.

பிரம்மாவும் சிந்தித்து உண்மையை அறிந்துகொண்டார். அசுரக் குழந்தையை அழிக்கப்பார்த்தார். அவரால் முடியவில்லை. விநாயகரிடமே தான் கடமையை மறந்து உறங்கியதற்காக மன்னிப்புக் கேட்டு அசுரனை அழிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதற்குள் அசுரனின் அட்டகாசம் தாங்கமுடியவில்லை. தேவர்களை வதைத்தான். அவர்களும் விநாயகரிடம் வந்து கூறினர்.

விநாயகர் மனமிரங்கி அந்த அசுரனைக் கசக்கிப் பிழிந்து தன் நெற்றியில் திலகமாக்கிக் கொண்டார். இதனால் அந்த அசுரனுக்கு 'செந்தூரன்' என்ற பெயர் உண்டாயிற்று.

## மலசலகூடங்கள் கட்ட

# 'நிக்கோட்' வழங்கிய நிதியுதவி பயன்படாமல் போகும்நிலை

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட வறிய குடும்பங்களுக்கு மலசலகூடம் கட்டுவதற்கு 'நிக்கோட்' அமைப்பினால் நிதியுதவியாக வழங்கப்படவிருந்த 6 லட்சம் ரூபா நிதி பயன்படுத்தப்பட முடியாது போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட நூறு பயனாளிகளைத் தெரிவு செய்வதில் ஏற்பட்டுள்ள தாமத நிலையே இதற்குக் காரணம்.

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற நூறு குடும்பங்களுக்கு மலசலகூடங்களைக் கட்ட தலா 6 ஆயிரம் ரூபா வீதம் கொடுப்பனவு வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி ஒதுக்கியுள்ளது.

இதற்கான பயனாளிகளைத் தெரிவு செய்வது குறித்து கடந்த புதன்கிழமை காலை இடம்பெற்ற யாழ். மாநகர சபை மாதாந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

ஒரு மலசலகூடத்தை அமைப்பதற்கு 30 ஆயிரம் ரூபாவரை செலவாகிறது. ஆகவே, வறிய குடும்பங்களைத் தெரிவுசெய்து, அவர்களுக்கு 6 ஆயிரம் ரூபாவை மட்டும் வழங்குவதால் எந்தவித பயனும் இல்லை என்று சபை உறுப்பினர்கள் சிலர் அப்போது வாதிட்டனர்.

இக்கொடுப்பனவு ஓர் ஊக்குவிப்புத் தொகை மாத்திரமே என்று யாழ்.மாநகர மேயர் செ.சுந்தையன் அங்கு பதிலளித்தார்.

பயனாளிகளைத் தெரிவுசெய்யும் பொறுப்பை சபை உறுப்பினர்களிடம் பகிர்ந்தளிக்கலாம் என ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர் த.சுபத்திரன் ஆலோசனை தெரிவித்தார்.

ஆயினும், பயனாளிகளைத் தெரிவு செய்வது தொடர்பான எந்த முடிவையும் எடுக்காத நிலையில் கூட்டம் நிறைவுபெற்றது. (ஒ-9)

### சென். ஜோனஸ் அம்புலன்ஸின்

# தேசியப் பாசறை நிகழ்வில் யாழ்.தெற்கு அணி முதலிடம்

யாழ்ப்பாணம்,செப்.20

திருகோணமலை விபுலானந்தா கல்லூரியில் கடந்த மாதம் இடம்பெற்ற சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தேசிய பாசறையில் யாழ்.தெற்கு மாவட்ட அணி முதலிடம் பெற்றுள்ளது.

யாழ்.தெற்கு மாவட்ட ஆணையாளர் எஸ்.செல்வரஞ்சன் தலைமையில் 50பேர் இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றினர். இவர்கள் பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி 9 விருதுகளையும் 3பதக்கங்களையும் பெற்றதுடன் சிறந்த மாவட்டத்துக்கான விருதினையும் தமதாக்கிக்கொண்டனர்.



யாழ்.தெற்கு மாவட்ட அணியினர், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தளபதி மற்றும் அதிகாரிகளுடன் எடுத்துக்கொண்ட படம்.

சிறந்த கூடாரம், சிறந்த கலாசார நிகழ்வுகள் போன்றவற்றுக்கான விருதுகளுடன் விசேட போட்டிகளுக்கான பதக்கங்களில் - த.தாரணி (வேம்படி மகளிர் கல்லூரி) தங்கப் பதக்கத்தையும் தை.யஸ்மின் ஒய்லூட் (யாழ்.பல்கலைக்கழகம்) வெள்ளிப் பதக்கத்தையும் பி.சாலினி (வேம்படி மகளிர் கல்லூரி) வெண்கலப் பதக்கத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் முதலுதவிப் போட்டியில் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சி.சண்மினி, நா.எழிலி, கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் சி.சனாதன், யாழ். இந்துக் கல்லூரியை சேர்ந்த இ.டேபீஸ்கந் ஆகியோர் பங்குபற்றி முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

இப்பாசறைப் போட்டிகளில் யாழ்.தெற்கு மாவட்ட தேசிய பிரிவினர் பதின்மூவாயிரத்து 230 புள்ளியைப் பெற்று சிறந்த மாவட்டத்தில் முதலாம் இடத்தையும் கடேற்ஸ் பிரிவு பதின்மூவாயிரத்து 170 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தினையும் தேசிய ரீதியாகப் பெற்றுக் கொண்டனர்.

யாழ்.தெற்குப் பிரதேசத்தின் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி, யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம், பரிஜோவான் கல்லூரி, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், கோண்டாவில் இராமகிருஸ்ண மகா வித்தியாலயம், யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் வெளிவாரிப் பரிவுகளையும் சேர்ந்த சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

### வர்த்தகர் தாக்கப்பட்ட சம்பவம்:

# மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணை நேற்றுமுன்தினம் நடந்தது

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ். நவீன சந்தைப்பகுதியில் வைத்து இராசரத்தினம் சர்வேஸ்வரன் என்ற வர்த்தகர் கடந்த 3 ஆம் திகதி யாழ்.பொலீஸாரால் எதுவித காரணமுமின்றி தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணை நேற்றுமுன்தினம் யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அலுவலகத்தில் நடைபெற்றது.

தாக்கப்பட்டதாகக் கூறப்படும் வர்த்தகரும் யாழ். பொலீஸார் மூவரும் இவ்விசாரணைக்கு சமுகமளித்திருந்தனர்.

தனக்கு நஷ்டஈடாக ரூபா 25 ஆயிரம் செலுத்தினால் சமாதானமாகப் போவதாக தாக்குதலுக்குள்ளானதாகக் கூறப்படும் வர்த்தகர் தெரிவித்தார்.

ஆனால், நஷ்டஈடு செலுத்துவதற்கு மறுப்புத் தெரிவித்த பொலீஸார் இணங்கிப்போகவும் மறுப்புத் தெரிவித்தனர். இதனையடுத்து இது தொடர்பாக கொழும்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிக்கை ஒன்றை அனுப்புவதாகத் தெரிவித்த யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இணைப்பாளர் இது தொடர்பான விசாரணை பின்னர் ஒரு திகதியில் இடம்பெறும் எனவும் அது தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் வர்த்தகரின் வாக்குமூலமும் இரு சாட்சிகளின் வாக்குமூலமும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் பதிவுசெய்யப்பட்டன. (ஓ-8)

### சிறுவர் தினத்தை முன்னிட்டு பொது ஒன்றுகூடல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.20

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம்திகதி கொண்டாடப்படவுள்ள உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு பொது ஒன்றுகூடல் நிகழ்வொன்றை நடத்துவதற்கு யாழ். மனித முன்னேற்ற நடுநிலையம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இம்மாதம் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது. இதற்கென தென்னிலங்கையில் இருந்து 75 சிறுவர்களைக் கொண்ட குழுவொன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 30 சிறுவர்களும் கலந்துகொள்கின்றனர்.

சமூக ஒற்றுமைக்கான பயிற்சிப் பட்டறையும் 'பிணக்குகளை இலகுவாகத் தீர்ப்பது' என்ற தலைப்பில் கருத்துரையும் விசேட நிகழ்வுகளாக இடம்பெறவுள்ளன.

இதேவேளை -

உலக சிறுவர் தினத்தைபொட்டி எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் விளையாட்டுப் போட்டியும் ஒன்றுகூடலும் இடம்பெறவுள்ளன.

தென்னிலங்கையில் இருந்து வரும் 30 சிறுவர்களும் யாழ். குடாநாட்டில் இருந்து 30 சிறுவர்களும் பங்கேற்கின்றனர்.

(ஓ-8)

### லண்டன் செல்லமுயன்றபோது

# போலி விசாவுடன் கைதான இளைஞருக்கு பிணை அனுமதி

கொழும்பு,செப்.20

'போலி விசாவுடன் லண்டனுக்குச் செல்லமுற்பட்டபோது கைதாகிய சின்னத்தம்பி தேவநேசன் என்பவரை பிணையில் செல்ல மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதியளித்தது.

கடந்த ஜனவரி மாதம் 2ஆம் திகதி கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து தேவநேசன் கைது செய்யப்பட்டார். இவரது கடவுச்சீட்டு அசலானது. ஆயினும், விசா போலியானது என்று கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இவர் கைதுசெய்யப்பட்டார்.

களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த சின்னத்தம்பி தேவநேசன் லண்டன் செல்வதற்காக கொழும்பு வந்து தங்கியிருந்த சமயம் பொர்னாண்டோ என்பவர் அறிமுகமானார். லண்டன் செல்வதற்கு அவசியமான விசா முதலான முக்கிய ஆவணங்களைத் தான பெற்றுத்தருவதாகவும், தனக்கு ஒரு லட்சம் ரூபா பணம் தரவேண்டுமெனவும் பெர்னாண்டோ தேவநேசனிடம் கேட்டுக்கொண்டார்.

தனது கடவுச்சீட்டை பெர்னாண்டோவிடம் கொடுத்த தேவநேசன் மறுநாளே விசாவைப் பெற்றுக்கொண்டார். போலி விசாவுடனும் கடவுச்சீட்டுடனும் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்த இவர் குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் 45 (1) பிரிவின் கீழ் கைதுசெய்யப்பட்டார்.

இவர் பின்னர் நீர்கொழும்பு நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். அப்போது நீதிவான் சந்தேக நபரை 2002ஆம் ஆண்டு பெபரவரி 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

தமக்குப்பிணை வழங்கும்படி தேவநேசன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றை தமது சட்டத்தரணி க.ஞானசேகரம் மூலம் தாக்கல் செய்தார்.

மனுமீதான விசாரணை கடந்த திங்கட்கிழமை மேன்முறையீட்டு நீதியரசர் ராஜா பெர்னாண்டோ முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போதே மனுதாரரான சின்னத்தம்பி தேவநேசன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

10 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையும், இருவரது சரீரப் பிணைகளும் வழங்க வேண்டுமென நீதியரசர் உத்தரவிட்டார். ஒவ்வொரு மாதத்திலும் இரண்டாவது சனிக்கிழமை கட்டுநாயக்க பொலீஸ் நிலையத்தில கையொப்பமிட வேண்டுமெனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

(ஓ)

### அச்சுவேலிப் பாடசாலையில்

# அதிபரை நியமிக்கக்கோரி மாணவர் போராட்டம்

அச்சுவேலி,செப்.20


ஒய்வுபெற்ற அதிபருக்குப் பதிலாக புதிய அதிபரை நியமிக்கக் கோரி அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை மாவணவர்கள் அனைவரும் நேற்றுமுன்தினம் தமது வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர்.

இப்பாடசாலையின் அதிபராக இருந்தவர் ஓய்வுபெற்று மூன்று மாதங்கள் கடந்துவிட்டபோதிலும், அதிபர் பதவிக்கு ஒருவர் இன்னமும் நியமிக்கப்படவில்லை. புதிய அதிபரை நியமிக்குமாறு கோரியே மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோருடன் பேச்சு நடத்தினார். விரைவில் ஒரு புதிய அதிபரை நியமிப்பதாகவும் அவர் உறுதியளித்தார். இதனையடுத்து மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பைக் கைவிட்டனர்.

(ஓ-8-11)

## தியாகத் திருவுருவே.....



### தியாகத்தின் திருவுருவமே!


சங்கத் தமிழனின் பெருமை பாடிட
பொங்கி யெழுந்து புகழ் சேர்த்தாய்
வங்கக் கடலும் வலிந்து கொடுக்க
பங்கம் செய்தவனைப் பார்த்து நகைத்தாய்!

இறந்த தாயின் மார்பில் பால்குடித்த
இளம் பிஞ்சுத் தமிழனின் வாழ்வினிலே
இன்னல் நீங்கி இன்பம் நிலைபெற
இனியவனே நீயும் இறையடி சேர்ந்தாய்!

உன்னும் உணவை உண்டிட மறந்தாய்
உண்ணா விரதத்தின் உணர்வினில் உறைந்தாய்
கண்ணும் மனமும் கருத்தினில் பதியவே
கடமையின் கருவாய் நீ கண்ணை மூடினாய்!

தியாகத்தின் திருவுருவமாய்த் திகழ்ந்த திலீபா!
திசையெங்கும் புகழ்பரவ திருவடி சேர்ந்தாய்
பண்பான தலைவனின் பாசமிகு பார்த்திபா!
பரணியின் சமாதானப் பாடலைக் கேளாய்யா!

சுகிர்தா சிறீவரதன்
வேம்படி மகளிர் கல்லூரி



### தாகம் தீர்த்துறங்க ஒருமுறை விழித்தெழண்ணா...!

பாரத தேசத்தின்
பகடைக்காய் விளையாட்டை
பாரறிய வைத்தவனே
பார்த்திபன் அண்ணா...

அகிம்சைக்கே இலக்கணமாய்
அநியாயம் நீக்குதற்கு
அந்நியரின் முகத்திரை கிழிக்க
ஆருயிர் ஈந்தவனே
அண்ணா திலீபா!

அன்றொருநாள் நீகண்ட
அகலாக் கனவுகள்
இன்றிங்கு நிலைத்திட
வழியொன்று பிறக்குது
எங்கே அண்ணா
ஒருமுறையேனும் எமக்காய்
விழித்தெழ மாட்டாயா?

மீண்டும் உன்மண்
மாண்ட புலிவீரரின்
புகழ்பாடி மணம் வீசுதையா
உண்ணா நோன்பிருந்து - நீ
உயிர்விடுத்த நல்லூரில்
தமிழ் இனக்கொடி பறக்குதையா!

தாகம் தீர்த்துறங்கவென்றேனும்
விழித்தெழ மாட்டாயா?
உன் நினைவால்
எம் இனமே உருகுதையா
அன்புத் திருமுகம் காட்டாயா?

செந்தூர்ராஜ்
ஆறுகால்மடம்.

### வாந்திபேதி பரவுவதைத் தடுக்கும் வகையில்

# நெடுந்தீவில் ஐஸ்கிறீம் விற்பதற்குத் தடை

நெடுந்தீவு,செப்.20

நெடுந்தீவில் ஐஸ்கிறீம் விற்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

வாந்திபேதி நோய் பரவாமல் தடுப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளில் ஒன்றாகவே இத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக நெடுந்தீவு சுகாதாரப் பரிசோதகர் எல்.அருந்தவராசா அறிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களும் ஏனையோரும் ஐஸ்கிறீம் பாவிப்பதை நிறுத்துமாறும் -

தண்ணீரைக் கொதிக்கவைத்து ஆறிய பின்னர், அதனைக் குடிக்குமாறும் - அறிவுறுத்தல் விடுத்துள்ள அவர், பாடசாலை மற்றும் பொதுத் தாபனங்களில் வாந்திபேதி தடுப்பு குறித்து கருத்துரைகள் வழங்கப்பட்டுவருவதாகவும் அறிவித்துள்ளார்.

இதேசமயம், - வயிற்றோட்டம் காரணமாக நெடுந்தீவிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு நோயாளர் ஒருவர் அனுப்பிவைக்கப்பட்டார் என்றும் -

எனினும், வாந்திபேதி நோய்க்கு அவர் இலக்காகவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும்- ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-111)

# சைவநெறி நூல்களில் திருத்தங்கள் தேவை

## அது குறித்த கையேடு வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம்,செப்.20

கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டு தற்போது மாணவர்களினால் பயன்படுத்தப்பட்டு வரும் சைவநெறி நூல்களில் இனங்காணப்பட்டுள்ள தவறுகளும், அவற்றில் ஏற படுத்தப்படவேண்டிய திருத்தங்களும யாழ்.சைவ பரிபாலன சபையினால் புத்தகவடிவில் வெளியிடப்பட்டுள்ளன.

தரம் 6 முதல் 11 வரையிலான வகுப்புகளுக்குரிய நூல்கள் குறிததே இந்தத் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்.சைவ பரிபாலன சபையின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் சைவசமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அண்மையில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன என்றும் -

இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் மேற்படி திருத்தங்கள் தொடர்பான கையேடு வெளியிடப்பட்டுள்ளது என சைவபரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் வ.கந்தசாமி தெரிவித்தார்.

மேற்படி திருத்தங்கள் தொடர்பான கையேடு இந்துசமய நிறுவனங்கள், பாடசாலைகள் என்பனவற்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும் - அவர் தெரிவித்தார். (எ)

## விபத்தில் காயம்!

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்.இராசாவின் தோட்டம் பகுதியில் நேற்று இடம்பெற்ற வான் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் காரைநகரில் இருந்து இடம்பெயர்நது தற்பொழுது இராசாவின் தோட்டத்தில் வசித்துவருகின்ற ஆறுமுகம் செல்லையா (வயது 55) என்பவரே காயமடைந்தவராவார். (ஒ-10-15-ரி)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பேராசிரியர் அ.துரைராசா தங்கப்பதக்கம்

மேற்படி பதக்கங்களை வழங்கும் பொருட்டு 2002.10.12 ஆம் திகதி நடைபெறவிருக்கும் 2002ஆம் ஆண்டிற்கான பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறவிருக்கும் முதலாம், இரண்டாம் (மேற்பிரிவு) வகுப்பில் சித்தியடைந்தோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. பல்துறைத்திறமை வாய்ந்த பட்டதாரிகளுக்கான இப் பதக்கங்கள் கல்வியிலும், விளையாட்டிலும், ஏனைய சிறப்புச் செயற் பாடுகளிலும் மாணவர்கள் ஈட்டிய தேர்ச்சிகளை மதிப்பீடு செய்து வழங்கப்படும்.

விண்ணப்பங்களை (1) உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
(2) உதவிப் பதிவாளர், வவுனியா வளாகம், வவுனியா.
(3) பல்கலைக்கழக அலுவலகம், ஜஜி 04, சென்றல் றோட், கொழும்பு 12.

ஆகிய முகவரிகளிலும் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட படிவங்களை 'உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்' என்னும் முகவரிக்கு 2002.10.01 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
2002.09.19

(C-23893)

---

யாழ்.வண்ணை நீராவியடி

## கடையிற் சுவாமிகளின் 111ஆவது குருபூசையும் அன்னதானமும்

யாழ்ப்பாணம், வண்ணை நீராவியடி கடையிற் சுவாமிகளின் 111 ஆவது குருபூசையும் அன்னதானமும் நாளை (21.09.2002) சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்று காலை 7.00 மணிக்கு சுவாமிகளுக்கு ஸ்நபன கும்ப அபிஷேகமும், விசேட பூசையும் இடம்பெறும். அதைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணிக்கு குருவழிபாடும், அன்னதானமும் இடம்பெறும். அடியார்கள் அன்றைய தினம் குருபூசைக்கான பொருள்களை வழங்கி, குருவருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

- நிர்வாகசபை -

(8531)

---

## ஐந்து ஆண்டுகள்

### நீளும் நினைவலைகள்



அமரர் கந்தையா குலசேகரம்பிள்ளை
(எழுதுமட்டுவாழ்)

மலர்வு: 30.08.1926 | திதி 20.09.2002 | உதிர்வு 14.10.1997

வருடங்கள் வந்து வந்து வளருதைய்யா
வாழ்க்கை நினைவுகளோ வட்டமிட்டு பெருகுதையா
ஆரும் பேசுகிறார் உங்கள் ஆசைமுகம் நோக்கி
ஊரும் பேசுதைய்யா உங்கள் சேவை நலம் நோக்கி
பெற்றுவிட்டு பிள்ளைகளை பெருக்க வைக்காமல்
படிப்பித்து பணம்காசு பண்பு பலசேர்த்து பாசத்தைப்பொழிவித்தீர்
வசதிகள் தந்தீர்! வாழவைத்தீர்! வாழ்த்திவிட்டீர்!
கோயில்களில் கொலுவிருந்தீர் கொடுத்து குறையாது
பள்ளித் தலங்களில் பாறைசாற்றுகிறீர் புகழ் மறையாது
உம் மாதா மனம் மயங்க வாழுகிறீர் மன்னவனாய்
உம் மக்கள் மனம் கிறங்க வாழுகிறீர் தெய்வதிருவுருவாய்
இம்மண்ணும் கடல் வானும் மக்கள் குலமும் மறைந்து முடிந்தாலும்
மின்னும் நின் நினைவலைகள் நிறுத்த முடியாதைய்யா
இன்னும் இன்னும் நினைத்து நினைத்து நினைத்து நினைக்க முடியாதைய்யா

உங்கள் ஆத்ம சாந்திக்காக பெரியகேணிப் பிள்ளையார், விழுமளைக் கண்ணகை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

பழமுதிர்ச் சோலை,
நாகர்கோயில் றோட்,
எழுதுமட்டுவாழ்.

- குடும்பத்தினர்.

(8530)

---

## வயோதிப மாதிடம் தங்க நகைகள் அபகரிப்பு!

கைதடி,செப்.20

கைதடிப்பகுதியில், வீதியால் சென்றுகொண்டிருந்த வயோதிப மாது அணிந்திருந்த தங்க நகைகள், மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரால் அபகரிக்கப்பட்ட சம்பவம் அண்மையில் கைதடி மேற்கில் இடம்பெற்றது. கைதடி தெற்கைச் சேர்ந்த திருமதி குமாரசாமி தெய்வானை என்பவர் பூப்புனித நீராட்டுவிழாவுக்குச் சென்றுகொண்டிருந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9-ரி)

## மிதிவெடியில் சிக்கி பெண் படுகாயம்!

யாழ்ப்பாணம்,செப்.20

வத்திராயன் பகுதியில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவத்தில் குடும்பப் பெண்ணொருவர் தனது இடது காலினை முழங்காலுக்குக் கீழ் இழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் தாளையடி, வத்திராயனைச் சேர்ந்த தங்கவேல் பரமேஸ்வரி (வயது 45) என்பவரே காலை இழந்தவராவார்.

இச்சம்பவம் இடம்பெற்றவுடன் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(ஒ-10-15-ரி)

## வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் அம்ஷன் குமார் இயக்கிய "சுப்பிரமணிய பாரதி", பிரபல ஒடிசி நாட்டிய கலைஞர் கீதா மாலிக்கின் ஒடிசி நாட்டிய நாடகமான "வைணவதி" ஆகிய ஆவணப்படங்களுடன் ஆர்.ஸ்ரீநிவாசன் இயக்கிய குறும்படமான "அடிமைகள்" எனும் திரைப்படமும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளன. ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொண்டு பயன்பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ஓ)

## கோவிலில் திருடிய இளைஞர்களுக்கு பிணை

யாழ்ப்பாணம்,செப்.20

அரியாலை, மாரியம்மன் ஆலயத்தில் கடந்த மாதம் 19 ஆம் திகதி உண்டியல் உடைத்துப் பணத்தைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு இளைஞர்கள் நேற்று யாழ்.நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நல்லூர் முத்துவிநாயகர் வீதியைச் சேர்ந்த இளைஞரும் அரியாலை, முள்ளி வீதியைச் சேர்ந்த இளைஞருமே இவ்வாறு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரையும் தலா 10 ஆயிரம் ரூபாவுக்கான நான்கு வருட நன்னடத்தைப் பிணையில் செல்ல யாழ்நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி க.இளங்கோவன் அனுமதி வழங்கினார்.

(ஒ-10-ரி)

---

## யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு

DELMEGE FORSYTH & CO LTD.

ஆதரவில்

யா/மாவட்ட மரதன் / சைக்கிள் ஓட்டப் போட்டிகள்
ஆண்/பெண் இருபாலாருக்கும் உரியது.

❖ நடைபெறும் திகதி 12.10.2002, சனிக்கிழமை, மு.ப 7.00 மணி

விண்ணப்பங்கள் தனிப்பட்ட நபர்களிடமிருந்தும் பாடசாலை மாணவர்களிடமிருந்தும் வரவேற்கப்படுகின்றன.

கட்டணங்கள்:-

★ சைக்கிள் ஓட்டப் போட்டி ரூபா 50.00
★ மரதன் ஓட்டப் போட்டி ரூபா 25.00

ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் தங்கள் பங்குபற்றலை உறுதிப்படுத்தவும்.

புதிதாக விண்ணப்பிப்போர் தனிநபர்களாயின் நேரடியாகவும், பாடசாலை மாணவர்களாயின் அதிபருடாகவும் விண்ணப்பங்களை,

*அதிபர்,*
*யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி,*
*கோப்பாய்.*

எனும் முகவரிக்கு 5.10.2002, சனிக்கிழமைக்கு முன் அனுப்பவும்.

அதிபர்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

(8527)

---

# மரண அறிவித்தல்கள்

## விநாசித்தம்பி கந்தையா

மானிப்பாய், சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் வேலணையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி கந்தையா நேற்று (19.09.2002) காலமானார்.

இவர் குலசிங்கம், சிவஞானம், பாலசிங்கம், குணபூசனி, தனலட்சுமி, பரமேஸ்வரி, சோமசுந்தரம் ஆகியோரின் அன்புத் தந்தையும் மங்களேஸ்வரி, நித்தியபவனம், குமாரசாமி, செல்வரத்தினம், சிற்றம்பலம், புஸ்பகாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2002) நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேலணை மேற்கு அம்பலவி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யப்பான் வீடு,*
*வேலணை மேற்கு,*
*வேலணை.*

(8529)

தகவல்:-
க.சோமசுந்தரம்
(மகன்)

## தம்பையா இராசரெத்தினம்

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், வேலணை கிழக்கு முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும், தற்போது 3ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமாகிய தம்பையா இராசரெத்தினம் அவர்கள் (18.09.2002) புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் புளியங்கூடலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பையா முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும், வேலணை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், திலகவதியின் பாசமிகு கணவரும், சத்தியசீலன் (சதீஷ்-பிரான்ஸ்), சபேஷ் (கொனிக்கா சுனர் லாப்-யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சண்முகம் மற்றும் மாணிக்கம், காலஞ்சென்ற நாகரெத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுபாஷினி (பிரான்ஸ்), நந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், விதூராவின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற திரவியம்மா, நவரெத்தினம், காலஞ்சென்றவர்களான இராசரெத்தினம், சிவயோகம் மற்றும் அரசரெத்தினம் (இளைப்பாறிய தபாலதிபர்), இராசரெத்தினம், சீவரெத்தினம் (பிரான்ஸ்), தனலட்சுமி, கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற பரமசாமி மற்றும் ஜெயா, இரட்ணம், மணி, யோகநாதன் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*No-37,3 ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.*

(8535)

தகவல்:
மனைவி, மகன்.

## திருமதி வேலுப்பிள்ளை புஸ்பராணி

கச்சமோட்டைப் பிறப்பிடமாகவும், கைதடி நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை புஸ்பராணி அவர்கள் 18.09.2002 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசா - பாக்கியத்தின் புதல்வியும் தம்பு - நல்லம்மாவின் மருமகளும், சுயந்தினி, சுடாஸ்கரன், வசீகரன்,பிரபாகரன், சுமணா ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், அருமைநாயகம் (ஓய்வுபெற்ற நூலக ஊழியர்), யோகராசா, செல்லமணியம் மற்றும் துரைசிங்கம் (இலங்கை வங்கி), யோகநாதன் (சுவிஸ்), இந்திராணி (கொழும்புத்துறை இ.ம.வி. ஆசிரியை), விஜயகுமார் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், துரைசிங்கத்தின் மருமகனும், அனுசியாவின் மாமியாரும் கிருத்திகா, அபர்சிகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2002) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சுபிட்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில்,*
*கைதடி.*

(8536)

தகவல்:-
த.வேலுப்பிள்ளை

# ஐயோ கடவுளே...

கொழும்பு,செப்.20

நாட்டின் உயர்பதவியில் இருப்பவர் அண்மையில் தென்மாகாணத்தில் ஆற்றிய உரைகுறித்து பெரிய குழப்பம் இடம்பெற்றுவிட்டதாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

உயர் பதவியில் இருப்பவர் பேசிய பேச்சு பத்திரிகைகளில் வெளிவந்ததும், தான் அவ்வாறு பேசவில்லை எனப் பத்திரிகைகளுக்கு அவர் மறுப்புக் கடிதம் எழுத நேரிட்டது.

இந்த மறுப்புக் கடிதத்தை அனுப்புவதற்கு முன்பாக தனது செய்திப் பிரிவினரால் ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலிப்பதிவு நாடாவிலுள்ள தனது உரையைக் கேட்க உயர் பதவியில் உள்ளவர் விரும்பினார்.

ஒலிப்பதிவு நாடா கொண்டுவரப்பட்டது. போட்டுப்பார்த்தனர். அந்த ஒலிப்பதிவு நாடாவில் பேச்சை ஆரம்பித்தபோது அவர் கூறிய "நண்பர்களே" என்ற வார்த்தை மட்டுமே ஒலிப்பதிவாகியிருந்தது.

பின்னர் கேட்கவா வேண்டும். செய்திப் பிரிவினர் மீது வசைமாரி பொழியப்பட்டது.

தான் பேசிய பேச்சே தனக்குத் தெரியாமல் இருப்பதும், ஏனைய பத்திரிகைகளிடம் பேச்சின் ஒலிப்பதிவு நாடாக்கள் இருக்கும்போது பத்திரிகைகளுக்கு தான் அப்படிப் பேசவில்லை என மறுப்புக் கடிதம் எழுதுவதும் உயர்பதவி வகிப்பவருக்குப் பொருத்தமானதா?

ஐயோ கடவுளே.... (ஒ)

# கேட்கும் திறன் குறைந்த மாணவருக்கு உதவித்திட்டம்

குருநகர்,செப்.20

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களில் கேட்கும் திறன்குறைந்த மாணவர்களின் பயன்பாட்டிற்கான கேட்கும் சக்தியைக் அதிகரிக்க உதவும் கருவிகளை வழங்குவதற்காக விசேட நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு ஆரம்பித்துள்ளது. இந்தத்திட்டம் தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் முறைசாராக் கல்விப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.ஏ.ஏ.மல்காந்தி சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இத்திட்டத்தை சிறந்தமுறையில் செயற்படுத்தும் நடவடிக்கையின் முதற்கட்டமாக குடாநாட்டுப் பாடசாலைகளிலுள்ள கேட்கும்திறன் குறைவாகவுள்ளவர்களின் விவரங்களைச் சேகரித்து உடன் அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது. இதனையடுத்து, மேற்படி விவரங்களைத் திரட்டித் தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தத்தமது பகுதிகளிலுள்ள பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-51)


## யாழ்ப்பாணம் சமூக அபிவிருத்தி நிலையம்

இது UNHCR உதவியுடன் செயற்படும் ஓர் அரசசார்பற்ற நிறுவனம் ஆகும். கீழ்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றோம்.

(1) சிறுவர் நிலைய இணைப்பாளர்.

(2) பெண்கள் திட்டமிடல் உதவியாளர்.

(3) சிறுவர் நிலைய உதவியாளர்.

சுயவிவரக்கோவை மற்றும் உறுதிசெய்பவர்களின் பெயர், விவரங்களுடன் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவும்.

யாழ்ப்பாணம் சமூக அபிவிருத்தி நிலையம்,
159, 4ஆவது குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

நேர்முகப் பரீட்சை ஒக்ரோபர் மாத முற்பகுதியில் நடைபெறும்.

*159, 4ஆவது குறுக்கு வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(8518)
யாழ்ப்பாணம் சமூக
அபிவிருத்தி நிலையம்.



## இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகின்றது

"தமிழ் நாளங்களுள் புதிய செவ்விரத்தம் பாய்ச்சப்படட்டும்
மரபின் அடித்தளத்தில் புதுமைகள் எழுப்பப்படட்டும்"

திருமறைக் கலாமன்றம்
நடத்தும்

### தமிழ் விழா - 2002

செப். 20, 21, 22 (வெள்ளி, சனி, ஞாயிறு)

இன்று மு.ப. 9.30 - பி.ப. 1.00 மணிவரை கருத்தமர்வுகள் நடைபெறும்.

**இரண்டாம் நாள்: நாளை (21.09.2002) சனிக்கிழமை**

காலை நிகழ்வுகள்

மு.ப. 9.30 மணி - மன்றக் கலைத்தூது மணிமண்டபம்

கருத்தமர்வுகள்

*தலைமை* : திரு.க.இராஜகோபால் *(செம்பியன் செல்வன்)*

*தமிழ்த் திரைப்படங்கள்* : *"மாயையும் யதார்த்தமும்"* திரு.அ.யேசுராசா

*"ஈழத்தமிழர் வாழ்வியலில் புனைகதைகள் ஏற்படுத்திய தாக்கம்"*
திரு.க.குணராசா *(செங்கைஆழியான்)*

*"நவீன நாடகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்"* திரு.க.ரதீதரன்

மாலை நிகழ்வுகள்

மாலை 7.00 மணி - மன்ற அரங்கு

*தலைமை:* யோ.யோண்சன் ராஜ்குமார்
*(பிரதி இயக்குநர், திருமறைக் கலாமன்றம்)*

*சிறப்புரை:* திரு.புதுவை இரத்தினதுரை
*(பொறுப்பாளர், விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம்)*

*கலை நிகழ்ச்சிகள்:*

கவியரங்கு: பொருள்: "தூதுபோ என் கவியே"
தலைமை: திரு.ம.சாம் பிரதீபன்

கலைஞர் கௌரவிப்பு:
கௌரவிக்கப்படும் கலைஞர்கள்:
*இசைக்கலைஞர்* திரு.மரியாம்பிள்ளை
*நாடகக் கலைஞர்* திரு.பபூண் அலெக்ஸாண்டர்

நாட்டுக்கூத்து: ஏகலைவன் *(யாழ் திருமறைக் கலாமன்றம்)*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021-2222393

- திருமறைக் கலாமன்றம்.

Website: www.cpateam.org
e-mail: cpajaffna@eureka.lk
(C/23888)


## மாதாந்த கலந்துரையாடல்

வலி.மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தின் மாதாந்தக் கலந்துரையாடல் இன்று பி.ப. 3மணிக்கு வலி.மேற்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் 'சமூக முரண்பாடுகளும் அதனைத் தீர்க்கும் வழிகளும்' என்ற தலைப்பில் வைத்திய கலாநிதி எஸ்.சிவகுமார் கருத்துரை வழங்குவார். (எ-ரி)

## முன்பள்ளி ஆசிரியர் கருத்தரங்கு

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முழுநாள் கருத்தரங்கு ஒன்று இன்று முற்பகல் 8.30 மணி முதல் மானிப்பாய் நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

## 'எயிட்ஸ்' விழிப்புணர்வு திட்ட ஆரம்பவிழா

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் செயற்படுத்தப்படவிருக்கும் 'எயிட்ஸ்' விழிப்புணர்வுத் திட்டத்தின் ஆரம்பவைபவம் இன்று காலை 9.30 மணிக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயத்தின் நிதியுதவியுடன் குடாநாட்டில் இந்த 'எயிட்ஸ்' விழிப்புணர்வுத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. (ஒ-4)

## வல்லிபுர ஆழ்வார் தேர் இன்று

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சமுத்திர தீர்த்தம் நாளை சனிக்கிழமை (21.09.2002) பிற்பகல் 2 மணிக்கும், கேணித் தீர்த்தம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் இடம்பெறும்.

தேர், தீர்த்த உற்சவங்களை முன்னிட்டு வடபிராந்திய போக்குவரத்துச் சபையும், வடமராட்சி சிற்றூர்திச் சேவைச்சங்கமும் விசேட பஸ் சேவைகளை ஒழுங்குசெய்துள்ளன. (எ-173)

## கடற்றொழிலாளர் குழுக்கூட்டம்

காரைநகர்,செப்.20

ஊர்காவற்றுறை பிரதேச கடற்றொழில் குழுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் ஊர்காவற்றுறை பிரதேச கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படவுள்ளது. ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட அனைத்து கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-73)

## பேச்சுக்குறித்து ஆயர் கருத்து!

கொழும்பு,செப்.20

தாய்லாந்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்றுவரும் சமாதானப் பேச்சுக்களில் விட்டுக்கொடுப்புகள் இருக்க வேண்டும் என மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்புஜோசப் ஆண்டகை வேண்டுகோள்விடுத்துள்ளார்.


இந்தப் பேச்சின்மூலம் நிரந்தர சமாதானம் கிட்டவேண்டும் எனப் பிரார்த்திக்குமாறு மக்களை அவர் கேட்டுக்கொண்டார். (ஒ-12)


**பொருளியற் கல்லூரி**

இரு இடங்களில்
யாழ்.நகரில் - 21.09.2002
இணுவிலில் - 21.09.2002

கணக்கீடு
2004 A/L
தொடங்கற் கணக்கு

By: B.முகுந்தன்
*B.B.A. (Hons.) F.M.Spl.*

வல்வெட்டியூர் கவிஞர் ஆ.கதிர்காமத்தம்பி எழுதிய "வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மனின் அருளாட்சி" என்னும் நூலின் வெளியீட்டு விழா அண்மையில் மேற்படி ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இது தொடர்பாக இடம்பெற்ற நிகழ்வில் நூலின் முதற்பிரதியை நூலாசிரியரிடம் இருந்து ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் சு.குகப்பிரசாதன் பெற்றுக்கொள்வதைப் படத்திற்காணலாம். அருகில் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் நூலாசிரியரின் குடும்ப உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். (எ)

(அடுத்தவாரம் தொடக்கம்)

# அனுமதி பெறாது இயங்குகின்ற மதுச்சாலைகள்மீது நடவடிக்கை

## மதுவரி அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்.மாவட்டத்தில் அனுமதி பெறாது இயங்கும் சட்டவிரோத மதுபான விற்பனைச் சாலைகள் அனைத்தையும் மூடுவதற்கான துரித நடவடிக்கைகளை அடுத்தவாரம் மேற்கொள்ளவுள்ளதாக யாழ்.மாவட்ட மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி என். சோதிநாதன் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் சட்டவிரோதமாக இயங்கிவந்த மதுபானச் சாலைகளை மூடுவதற்கு கடந்த 15ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. ஆயினும், அவை மூடப்படவில்லை. இதனால் சட்டவிரோத மதுச்சாலைகள்மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

தற்போது கொழும்பில் தங்கி நிற்கும் யாழ்.மாவட்ட உதவி மதுவரி ஆணையாளர் என்.சிறிகாந்தா இந்த நடவடிக்கையை மேற்கொள்ளும் பொருட்டு அடுத்தவாரம் முற்பகுதியில் யாழ்ப்பாணம் வருகைதருவதோடு யாழ்.மாவட்ட மதுவரி நிலையத்திற்கென புதிதாகப் பெறப்பட்ட வாகனத்தையும் எடுத்துவரவுள்ளார்.

- இவ்வாறு என்.சோதிநாதன் மேலும் தெரிவித்தார். (ஒ-ரி)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றித் திருப்பலியும்

### அமரர் உயர்திரு.சூசைப்பிள்ளை யோசவ்

(Leyden Joseph)

இவர் பிரபல தொழில் அதிபராகவிருந்து பல நூற்றுக் கணக்கானவர்களுக்கு, அவரால் நடத்தப்பட்ட லைடன் தொழிற்சாலை, லைடன் புடைவை நிலையம், கோப்பாய் பண்ணை, கோழிப்பண்ணை, பாற்பண்ணை ஆகிய தொழிலகங்களில் வேலை வாய்ப்பும், நல்வாழ்வும் வழங்கி வந்திருந்தார். யுத்தத்தின் அழிவுகளில் பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அனைத்தையும் இழந்தார். கொழும்பு மாநகரில் அமைதியாக வாழ்ந்து வந்தவர் தமது இறுதிநாள்களை தாம் அதிகம் நேசித்த யாழ்.மண்ணிலே கழித்தார். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிக்க தனது கோப்பாய் பண்ணையில் ஓர் இல்லம் நிறுவும் பணியில் ஈடுபட்டிருந்தபோது இறைவன் அவரைத் தம்மிடம் அழைத்துக்கொண்டார்.

அன்னாரின் விசுவாச வாழ்வையும், அன்பின் செயற்பாடுகளையும் இரக்கமுள்ள இறைவன் ஏற்று தம் இன்ப வீட்டில் அவர் வாழ்வுபெறப் பிரார்த்திப்போம். இவை அனைத்திற்கும் நன்றிகூறவும், இவரது ஆன்மா சாந்தி பெறவும் நாளையதினம் சனிக்கிழமை 21ஆம் திகதி காலை 6.30 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

எமது உற்றார், உறவினர், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*472, பிரதான வீதி,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.*
(8511)

- குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### சின்னத்துரை கணபதிப்பிள்ளை

காங்கேசன்துறை, தையிட்டியைச் சேர்ந்த சின்னத்துரை கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற பொறியியலாளர், காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனம்) அவர்கள் 17.09.2002 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும் பகீரதன் (U.K.), அமீர்தன் (U.K.), கலீதரன் (U.K.), நகீரதன் (U.K.), சிறீதரன் (U.K.), கிருபாரதன் (U.K.), பகீரதி (U.K.) ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தி, இராசமலர், ஜானகி, ரேவதி, லலீதாம்பிகை ஆகியோரின் அன்பு மாமனாரும் சதுர்ஷன், ஜெனார்தன், ஜனனி, ஜெமியன், ரஜீன், ரேஸான், கனிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் குமாரசாமி, காலஞ்சென்ற குணேஸ்வரியின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.09.2002) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மகிந்த மலர்ச்சாலை, 591, காலி வீதி, கல்கிசையில் நடைபெற்றுத் தகனக்கிரியைகள் பி.ப. 5.00 மணிக்கு கல்கிசை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

*43B, அல்பேர்ட் பிளேஸ்,*
*தெஹிவளை.*
*தொலைபேசி: 735209*
(C/23887)

தகவல்:
க.கலீதரன்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புலோப்பளையில் 30ஏக்கர் கொண்ட தென்னந்தோட்டம், வீடு, கிணறு உட்பட விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.சிவராசா, 151, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.(8335)

நல்ல நிலையில் உள்ள L.M.L பஜாஜ் ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அருமைநாயகம், ஏ.வி.றோட், சென் மேரிஸ். முதலாம் ஒழுங்கை, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (8500)

நல்ல நிலையில் உள்ள CD185 Modal மோட்டார்சைக்கிள் விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: P.கிருபா, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி. (8483)

புதிய இன வர்ண மீன்களும், மாபிள்ஸ்ரார், ஒஸ்கா, இன்னும் பல இன மீன்களையும் அறுகோண தொட்டிகளும் அதற்குரிய பொருள்களும் விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: 535A, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, (பெற்றோல் நிலையம், அருகில்) யாழ்ப்பாணம். (8508)

## வளர்ப்பு மீன் விற்பனை

பல இன கலர் மீன்கள் Air Pump, தொட்டி உபகரணங்கள், மருந்து, வகைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (8502)

## தவறிவிட்டது

566, கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த திருமதி சிவமலர் செந்தில்நாதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.556631247V), விசேட அடையாள அட்டை (இல. 0902036368) என்பன யாழ்.பஸ் நிலையத்திற்கும் தட்டாதெரு சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இலங்கை வங்கி யாழ். பிரதேச காரியாலயத்தில் ஒப்படைத்து உதவவும். T.P. 3126. (8492)

NPGH 5930 மோட்டார் சைக்கிள் இன்சூரன்ஸ், TAX பத்திரங்கள் மானிப்பாயில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் Dr.இராசையா, மெடிகிளினிக், மானிப்பாய் என்னும் முகவரியில் தொடர்புகொள்ளவும். T.P 3572. (8504)

## திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், கெமரா வகைகள் எலக்ரோனிக் பிளாஸ்கன், பிளாஸ்டிக் பாட்ஸ் ஒட்டுதல் திருத்தம்செய்து கொடுக்கப்படும். தொடர்பு: சு.நாராயணசாமி, 301,கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி சந்திக்கருகில் (மேல்மாடி), யாழ்ப்பாணம். (8482)

## தேவை

யாழ்.மாநகர எல்லைக்குள் அரச உத்தியோகத்தருக்கு வீடு விலைக்குத் தேவை. விற்கவிரும்புவோர் பகல் 1.00 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இலக்கம் 071-277685 (C/23880)

## மணமக்கள் தேவை

உள்நாட்டில், வெளிநாட்டில் பணிபுரியும் மணமக்களுக்கு பட்டதாரி மணமக்கள் தேவை. ஸ்பொன்சன் வசதி உண்டு. ஜாதகம், போட்டோ என்பவற்றுடன் 29-09-2002இற்கு முன நேரடியாகத் தொடர்புகொள்ளவும். N.கந்தையா, சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (8479)

## காணி தேவை

தோட்டம் செய்வதற்குரிய காணி ராஜ வீதியில் அல்லது இருபாலை கோண்டாவில் வீதியில் 5தொடக்கம் 20 பரப்பு வரை விலைக்குத் தேவை. தனிக்கிணற்றுடன் இருப்பின் விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இல. 1652, மே/பா உதயன். (8487)

## இறைச்சிக் கோழி தேவை

Broiler இறைச்சிக் கோழிகள் தேவை. தொடர்பு:19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (8501)

## ஜோதிடம்

உங்கள் ஜாதக இரகசியங்களை அறிந்திடவும், திருமணப் பொருத்தம், கம்பியூட்டர் மூலம் ஜாதகங்கள் கணித்திடவும் உடன் தொடர்புகொள்ளவும். N.கந்தையா, சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை. (8478)

## முழுநிலா நாள் கலைவிழா

வலிகாமம் கிழக்கு,செப்.20

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் முழுநிலா நாள் கலைவிழா இன்று வெள்ளிக்கிழமை கல்லூரியின் இந்து போட் இராஜரட்ணம் அரங்கில் கல்லூரி அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ-180)

A/L 2004 இற்கான
CIT (தகவல் தொழில்நுட்பம்)
ஆரம்பம்: 29.09.2002 4 p.m.
(மாதாந்தம் ரூ.100/- மட்டுமே)
CIT
கணனிக் கல்லூரி
சந்நிதி வீதி,
அச்சுவேலி. (8456)

## இடம்பெயர்ந்தோர் நிவாரணம் விநியோகம்

வலி.வடக்கு,செப்.20

செப்ரெம்பர் மாதத்திற்கான இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண விநியோகம் அடுத்த வாரம் முதல் வழங்கப்படவுள்ளன.

நிவாரணம் வழங்குவதற்கான பணிப்புரைகள் யாழ்.செயலகத்தினால் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. (ஓ-86)

## வினாடிவினா போட்டிகள்

தென்மராட்சி,செப்.20

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான பாட வினாடி வினாப் போட்டிகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதென வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-117)

## பயிற்சி வகுப்பு

தென்மராட்சி,செப்.20

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 3,4 ஆகிய வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் முதன்மை நிலை பயிற்சி வகுப்புகள் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணிமுதல் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன. (எ)

## அப்பியாசப்புத்தகம் விநியோகம்

தென்மராட்சி,செப்.20

கொடிகாமம், பளை கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கென சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினர் ஒரு தொகுதி அப்பியாசப் புத்தகங்களை கோட்டக்கல்வி அலுவலகங்களுக்கு வழங்கியுள்ளனர்.

சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் தற்போது கல்வி கற்கும் மாணவர்களின் விவரங்களை அதிபர்கள் சமர்ப்பித்து அப்பியாசப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என கோட்டக் கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது. (எ-117)

## நாவலர் வீதியை செப்பனிட நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.20

நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமலுள்ள யாழ்.நாவலர் வீதி விரைவில் செப்பனிடப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக நாவாந்துறையிலிருந்து பலாலி வீதியில் இலுப்பையடிச் சந்தி வரையான பகுதி முதலில் புனரமைக்கப்படவுள்ளதாகவும் - யாழ்.மாநகரசபை முதல்வர் செ. கந்தையன் தெரிவித்துள்ளார்.(ஓ-10)

# எக்ஸ்போ ஏவியேஷன் மூலம்
## கொழும்பிற்கான விமானப் பயணம்
### பயணிகளுக்கான சலுகைகள்

வானில் முதல்வன்

- பாதுகாப்பான, சௌகரியமான பயணம்
- தாராளமான பயணப்பொதி சலுகைகள் - 20Kg
- விமான சேவையின் அனுபவமும், நம்பகத்தன்மையும்
- சிக்கன கட்டண வகுப்பும், தெரிவு வகுப்பும்
- ஆரம்பத்திலிருந்து 100 சதவீத நேரம் தவறாமை
- புறப்படுவதிலும் சென்றடைவதிலும் சௌகரியமான நேரம்
- பயணத்தின்போது அனுபவம் வாய்ந்த ஊழியர்களின் சிநேகபூர்வமான உள்ளகச் சேவை.

18 செப்ரெம்பர் 2002 முதல்

எக்ஸ்போ ஏவியேஷனின் சமாதானத்தை நோக்கிய உதவிப்பயண அறவீடு பின்வருமாறு
(EXPO AVIATION PEACE SUPPORT PROMOTIONAL FARES)

| சிக்கன வகுப்பு | தெரிவு வகுப்பு |
|---|---|
| வயது வந்தவர்களுக்கு | வயது வந்தவர்களுக்கு |
| இருவழிப் பயணம் ரூபா 4550 | இருவழிப் பயணம் ரூபா 8900 |
| ஒருவழிப் பயணம் ரூபா 2425 | ஒருவழிப் பயணம் ரூபா 4150 |

ஒதுக்கீடு செய்வதற்கும் பயணச்சீட்டு பெறுவதற்கும்

விமானசேவை அலுவலகம்
இல.1E, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 730555 அல்லது 077 730666

முகவர்கள்: மகாலட்சுமி ஸ்ரோர்ஸ், 212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.-021-2223564.
டெலெக்ஸ் கொமினிகேஷன், K.K.S. வீதி (சுன்னாகம் சந்தி), சுன்னாகம். தொ.பே: 021 2223568 அல்லது 021 2223569
(C/23881)

# The Barbara Mulvaney Computer Training center
123, Temple Road, Jaffna

## Diploma Courses

| | |
|---|---|
| Diploma in Microsoft Office | Diploma in Photo Graphic |
| Diploma in Desktop Publishing | Diploma in Programming |
| Diploma in Information Technology | Diploma in Kids Course |
| Diploma in Software application | Diploma in Studio Designing |

## Certificate Courses

| | |
|---|---|
| Microsoft Word | Microsoft Visual Basic 6 |
| Microsoft Excel | Adobe Page Maker 6.5 |
| Microsoft Access | Corel DRAW 9 |
| Auto CAD 2000 | Adobe Photo shop |

வகுப்புக்கள் யாவும் 25-9-2002 அன்று ஆரம்பமாக இருப்பதால் 24-9-2002 இற்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

நிர்வாகம்

# யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவை நடத்தும்
## கலாசார விழா - 2002

இடம் : யா/வேம்படி மகளிர் கல்லூரி
காலம் : இன்று (20.09.2002) வெள்ளிக்கிழமை
நேரம் : பிற்பகல் 1.30 மணி
தலைவர் : திரு.பா.செந்தில்நந்தனன் (பிரதேச செயலர் - யாழ்ப்பாணம்)
பிரதம விருந்தினர் : பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளார் (இயக்குநர், திருமறைக் கலாமன்றம்)
சிறப்பு விருந்தினர் : திருமதி க.பொன்னம்பலம் (அதிபர், வேம்படி மகளிர் கல்லூரி)
திரு.கே.வி.சிவனேசன் (அத்தியட்சகர், கைதடி முதியோர் இல்லம்)

நிகழ்ச்சிநிரல்

மங்கல இசை: வண்ணார்பண்ணை மகேஸ்வரன் குழுவினர்
...கச்சேரி: திரு.தவநாதன் றொபேட்
இசைக்... ...நுண்கலைப்பீடம்)
(இராமநாதன் ...கவும்
கலைஞர் கௌரவிப்பும் விருது வழ... ...விகள்.
நடனம்: நடன கலாமணி அகல்யா சுந்தரம் அவர்களின் மாண...
பட்டிமன்றம்: நடுவர் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல்
யாழ்.திருமறைக் கலாமன்றத்தினர் வழங்கும் 'ஏகலைவன்'

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதேச செயலகம், யாழ்ப்பாணம். (8507) கலாசாரப் பேரவை, யாழ்ப்பாணம்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 - 02 - 1929 | மறைவு 01 - 10 - 2001

## அமரர் செல்லையா இராசரத்தினம்

(இளைப்பாறிய சமூகநல சேவை உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்)

திதி: 20-09-2002

எங்கள் அன்புத் தந்தையே!
புன்னகை சிந்திடும்
பூமுகம் கொண்டவரே!
பூக்களாய் மலர்ந்த எம்மை
நீர் ஊற்றி வளர்த்தீரே!
பிரிந்து ஓராண்டு ஓடியதோ?
பிஞ்சு நெஞ்சங்களாய்த் தவிக்கின்றோம்
ஐயா உங்கள் நினைவுகளால்!

தகவல்:
S.சற்குணராசா (ஆசிரியர் - மருமகன்)
இந்திர அம்மன் கோயிலடி,
துன்னாலை தெற்கு, கரவெட்டி.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(8513)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவராமலிங்கக் குருக்கள் அமிர்தாம்பிகை அம்மா

புங்குடுதீவை வசிப்பிடமாகக் கொண்ட சிவராமலிங்கக் குருக்கள் அமிர்தாம்பிகை அம்மா கடந்த 18-09-2002 புதன்கிழமை இரவு புங்குடுதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவராமலிங்கக் குருக்களின் அன்பு மனைவியும் நெடுந்தீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இரத்தினசாமிக் குருக்கள் - சொர்ணம்மா தம்பதிகளின் அன்பு மகளும் அனலைதீவைச் சேர்ந்த இராமசாமிக்குருக்கள் - சொர்ணம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் மனோகரராசக் குருக்கள், மாதவராசசர்மா, சகுந்தலா ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகலெட்சுமி அம்மா, நீரஜா, லோகேஸ்வரியம்மா ஆகியோரின் அன்பு மாமியாரும் மகேஸ்வரக்குருக்கள், இணுவில் வீரமணி ஐயர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிருஷ்ணமூர்த்திக்குருக்கள், காலஞ்சென்றவர்களான மீனாட்சி சுந்தரக்குருக்கள், பரமேஸ்வரியம்மா, கெங்காதரக்குருக்கள் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனோகரராசக்குருக்கள் (மகன்)
புங்குடுதீவு - 3. (8505)

# கிளிநொச்சியில் 3 தினங்கள் 'வாழ்வாதாரம்' கண்காட்சி

கிளிநொச்சி,செப்.20

வடக்கு - கிழக்கு மாகாண தொழில்துறை திணைக்களம் நடத்தும் 'வாழ்வாதாரம்' கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமைமுதல் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமைவரை கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

உள்ளூர் வளப்பயன்பாடு, தொழில் பயிற்சியூடான மனிதவள அபிவிருத்தி, புதிய தொழில்நுட்ப அறிமுகம் மற்றும் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட இக்கண்காட்சி தினமும் பிற்பகல் 2மணிமுதல் இரவு 9மணிவரை நடைபெறும்.

இக்கண்காட்சியில் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த தொழில் துறையாளர்கள் பங்குபற்றுகின்றனர்.

இக்கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்படும் கைத்தொழில், கைப்பணி மற்றும் விவசாய விலங்கு வேளாண்மை தொடர்பான - தரமான பொருள்கள் தெரிவுசெய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், வடக்கு - கிழக்கு மாகாணத்தின் - விவசாய திணைக்களம், கிராம அபிவிருத்தி திணைக்களம், விலங்கு வேளாண்மை திணைக்களம் மற்றும் உள்ளூர் சமூக நல அமைப்புகள் ஆகியன இக்கண்காட்சியில் பங்களிப்புச் செய்கின்றன.

இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை இரவு 7மணிக்கு கலை நிகழ்வுகள் இடம்பெறும். (ஐ-9)

# செல்லிடத் தொலைபேசி பாவனை திடீர் அதிகரிப்பு

கொழும்பு,செப்.20

இலங்கையில் செல்லிடத் தொலைபேசிப் பாவனை விரைவாக அதிகரித்து வருவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. மத்திய வங்கியின் சமீபத்திய புள்ளிவிவர அறிக்கையின்படி, 2002ம் ஆண்டு ஜுன் மாதம்வரை இலங்கையில் 8 லட்சத்து 50ஆயிரத்து 872 கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதேசமயம் நாட்டில் 7லட்சத்து 50ஆயிரம் செல்லிடத் தொலைபேசிகள் புழக்கத்தில் உள்ளன. இது செல்லிடத் தொலைபேசிப் பாவனையின் வேகமான அதிகரிப்பை எடுத்துக்காட்டுகிறது.

இவ்வருடத்தின் முதல் ஆறுமாத காலத்தில் 21ஆயிரத்து 790பாவனையாளர்கள் கேபிள் தொலைபேசி இணைப்புக்களைப் பெற்றுள்ளனர். அதேசமயம் இக்காலப்பகுதியில் 82 ஆயிரத்து 338வாடிக்கையாளர்களால் செல்லிடத் தொலைபேசி வசதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கேபிள் தொலைபேசி வசதியைப் பெறுவதை விட செல்லிடத் தொலைபேசி வசதியைப் பெறுவதற்கே பாவனையாளர்கள் ஆர்வம் காட்டுவதை உணர முடிகிறது.

இன்று இலங்கையில் ஒவ்வொரு ஆயிரம் பேரில் 45 பேர் தொலைபேசி வசதி பெற்றுக் கொண்டுள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

இணைய வசதிகளைப் பெறும் பாவனையாளர்கள் தொகையும் அதிகரித்துள்ளது. இதுவே தொலைபேசி பாவனை அதிகரிப்புக்கு ஒரு காரணமாகும்.

## பாதுகாவலர் சங்க கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.20

வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் பாதுகாவலர் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. சிவாஜிலிங்கமும் கலந்துகொள்ள உள்ளார். முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்பட உள்ளதால் உறுப்பினர்களைத் தவறாது வருகைதரும்படி சங்கம் கேட்டுள்ளது. (ஐ-9)

# யாழ். பல்கலைக்கழக ஊழியர் தின விழா நாளை

அனைத்துப் பல்கலைக்கழக போதனைசாரா ஊழியர் தொழிற்சங்க சம்மேளன மத்திய குழுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது. ஊழியர்தின விழா நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

ஊழியர்தின விழா அன்று காலை 9மணிக்கு மருத்துவ பீட மைதானத்தில் சம்மேளன அணிக்கும் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ கிரிக்கட் போட்டி இடம்பெறும்.

அன்று மதியபோசன விருந்தைத தொடர்ந்து பிற்பகல் 2.15 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் விருந்தினர் உரைகளும் நாடக நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இம்முறை ஊழியர்தின விழா தமிழ் மக்களின் நிலைப்பாட்டை தென்னிலங்கை பல்கலைக்கழக ஊழியருக்கு வெளிப்படுத்தும் மேலதிக நோக்கமொன்றையும் கொண்டுள்ளது என யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. (ஒ)

# பயிற்சிப் பட்டறை நடத்த வங்கி அதிகாரிகள் வருகை

மக்கள் வங்கியின் யாழ்ப்பாண பிரதேச கிளைகளின் அலுவலர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்துவதற்காக வங்கி உயர் அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

மக்கள் வங்கியின் சர்வதேச பிரிவின் உதவிப்பொதுமுகாமையாளர் மார்கஸ் ஜெயசிங்க தலைமையில் வருகைதரும் இக்குழுவினர் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்வர்.

பிரதான முகாமையாளர் ஏ.எச். சிறிசேன, வர்த்தக சேவைப்பிரிவு முகாமையாளர்கள் காந்தி ஜெயசிங்க, லெஸ்லீ அழகக்கோன், வெஸ்டேன் யூனியன் நிலைய பிரதி முகாமையாளர் கே.டபிள்யூ அயூபர், இணைப்பாளர் பத்மினி ஹெறாரகை மற்றும் வங்கி ஊழியர் பயிற்சிப் பாடசாலையை சேர்ந்த பிரியங்கர ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர். (ஐ-9)

# தாய்லாந்துப் பேச்சு வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை உறுதிப்படுத்த மூலவளங்கள் அவசரமாகக் கிடைப்பது அவசியம் என்பதை தாய்லாந்துப் பேச்சுக்களும் திடமாக அங்கீகரிக்கின்றன என்றும் பிரதமர் கூறினார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 57ஆவது கூட்டத்தொடரில் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றினார்.

அமெரிக்காவில் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி நடைபெற்ற தாக்குதலை நினைவு கூர்ந்த பிரதமர் ரணில், மோதல்களும் பயங்கரவாதமும் விளைவிக்கும் துயரங்களை இலங்கையர் நன்கு அறிவர் என்றும், 20 வருட மோதல்களால் 65 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டும் 8 லட்சம் பேர் உள்நாட்டில் இடம்பெயர்ந்தும் உள்ளனர் என்றும் சொன்னார்.

பிரதமர் ரணில் தனது நீண்ட உரையில் மேலும் கூறியதாவது:-

நோர்வேயின் அனுசரணையுடன் தாய்லாந்து, சட்டாஹிப் நகரில் இரண்டு தினங்களுக்குமுன் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகின. இப்பேச்சுக்கு வழிவகுக்கவும், சமாதானத்துக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கவும், புலிகள் இயக்கத்துக்கு சமாதானத்துக்கான ஒரு சந்தர்ப்பம் வழங்கவும் இலங்கை அரசு புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கியது.

புலிகள் இயக்கத்துடனான பேச்சுக்களின் ஆரம்பக் கட்டத்தில் மக்களுக்கு நிவாரணத்தையும் வழமை நிலையையும் வழங்கக் கூடிய தேவைகள் குறித்து கவனம் செலுத்துகிறோம். போர் நிறுத்தத்தை அடுத்து, தமது சுதந்திரத்தை மீண்டும் கண்டடைந்து விட்டது குறித்து மக்கள் மகிழ்ச்சி அடைவது தெரிகிறது.

பொதுமக்கள் இன்னும் கூடுதலாக எதிர்பார்க்கிறார்கள். நாட்டின் சகல பாகங்களிலும் இருந்து மக்கள கடந்தவாரம் சமாதானப் பேரணிக்காக ஒன்று கூடியதால் கொழும்பு ஸ்தம்பித்தது. மக்களின் தேவைகளை நிறைவேற்றியதும் நாம் சிக்கலான அரசமைப்பு சட்டவிடயங்களை அணுக முடியும். ஐக்கிய இலங்கைக்குள் சகல சமூகங்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் ஓர் இடைக்கால நிர்வாகம் எம்முன் உள்ள ஒரு வழி என்று நாம் நம்புகிறோம். அரசாங்க அதிகாரத்தைப் பரவலாக்கியும், ஐந்து பிராந்திய பொருளாதார அபிவிருத்தி வலயங்களை உருவாக்கியும் உள்ளூர் மக்களுக்கு அதிகாரம் வழங்கி நாம் முன் செல்ல இது எமக்கு இடமளிக்கும். தமது பிராந்தியங்களில் பொருளாதார வளர்ச்சியைத் தூண்ட உள்ளூர் மக்கள் பொறுப்பாக இருப்பதற்கு இதன் மூலம் நாம் உற்சாகமளிக்க முடியும்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள மக்கள் அனுபவிக்கும் அதே ஜனநாயக, மனித உரிமைகளையும், பாதுகாப்பையும், வாழ்க்கைத்தரத்தையும் வடக்கு - கிழக்கில் உள்ள மக்களும் அனுபவிப்பதை உறுதிப்படுத்த எனது அரசாங்கம் உறுதி கொண்டிருக்கிறது.

சர்வதேச சமூக நாடுகளும் ஐ.நா. சபையும் சமாதான செயற்பாடுகளுக்கு வழங்கும் ஆதரவை இலங்கை வரவேற்கிறது. எமது சொந்தப் பிரச்சினைக்கு சமரசத் தீர்வை நாடும் அதேவேளை, இஸ்ரேல் - பலஸ்தீனப் பிரச்சினைகளுக்கும் சமரசத்தீர்வு காணப்படுவதை இலங்கை ஆதரிக்கிறது.

இலங்கையில் உண்மையான சமாதானத்தை மக்களே கட்டியெழுப்புவார்கள். மக்கள் ஒருவரோடு ஒருவர் உரையாடி கடந்தகால அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கையில் அவநம்பிக்கையும் சந்தேகமும் மெல்ல மெல்ல விலகிச் செல்லும்.

சிலரின் மனதில் உள்ள பகைமை விலகிச்செல்ல சிறிது நீண்டகாலம் பிடிக்கும்.

ஆயுதங்களுக்கான பெருவிருப்பு அழிந்தும், கண்ணிவெடிகள் அகற்றப் பட்டும் சிரிப்பின் ஒலி மீண்டும் கேட்கும்போது அதிலிருந்து விடுபட முடியும் - என்றார். (ஐ-12)


## 'உதயன் - சஞ்சீவி' வன்னிப் பிரதேச செய்தியாளர்களுக்கான பதவிகள்

வன்னியில் பின்வரும் பிரதேசங்களில் 'உதயன் - சஞ்சீவி' பத்திரிகைகளின் செய்தியாளர்களாகப் பணிபுரிவதற்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ கிளிநொச்சி ★ மாங்குளம்
★ புதுக்குடியிருப்பு ★ மல்லாவி

விண்ணப்பதாரிகள் குறித்த பிரதேசத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் (தமிழ்மொழி உட்பட) சித்தி அடிப்படைத் தகைமையாகவும் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் சித்தி மற்றும் ஆங்கிலமொழி அறிவு என்பன மேலதிக தகைமைகளாகவும் கணிக்கப்படும். அத்துடன் தமிழில் நன்கு எழுதும் ஆற்றலும் பிரதேச புவியியல் பற்றிய அறிவும் கவனத்திற்கொள்ளப்படும்.

விண்ணப்பங்களைச் சொந்தக் கையெழுத்தில் தயாரித்து

'பிரதம ஆசிரியர்,
உதயன் - சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்'

என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும். விண்ணப்பங்களை நேரிலும் கையளிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வன்னி' பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடவும்.

விண்ணப்ப முடிவு தினம்: 26.09.2002

(G/23776)


# மரண அறிவித்தல்கள்

## 'தமிழ்மன்' தெல்லியூர் செல்லையா நடராசா

(இளைப்பாறிய மொழிபெயர்ப்பாளர், முன்னாள் பத்திரிகை ஆசிரியர், பிரபல சோதிடர்)

தெல்லிப்பழை, முல்லாத்தனையைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தெல்லியூர் செல்லையா நடராசா நேற்று (19.09.2002) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லையா - மாரிமுத்து தம்பதிகளின் புதல்வரும் காலஞ்சென்ற தம்பையா - மாரிமுத்து தம்பதிகளின் மருமகனும் திருமதி கனகம்மாவின் அன்புக் கணவரும் கனகவேல்ராசா (பகுதிநேர விரிவுரையாளர், தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில்), திருமதி இராஜசிவசக்தி மகேசன் (கணனிப்பிரிவு, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அருமைத்தந்தையும் கலாநிதி சி.மகேசன் (கணனித்துறை, யாழ்.பல்கலைக்கழகம்) அவர்களின் மாமனாரும் வித்தகன் (யாழ். பொஸ்கோ வித்தியாலயம்), சங்கவி ஆகியோரின் அருமைப் பேரனும் நமசிவாயம் (இளவாலை), காலஞ்சென்ற சிவக்கொழுந்து (அளவெட்டி), சிவபாக்கியம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சரஸ்வதி (பண்டத்தரிப்பு), நகுலாம்பிகை (விடத்தற்பளை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீமதி. காலஞ்சென்ற முத்தையாபிள்ளை, காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை, காலஞ்சென்ற மயில்வாகனம், சுப்பிரமணியம், சிவபாக்கியம், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், கனகசபை (ஓய்வுபெற்ற மாநகரசபை சிற்றூழியர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (20.09.2002) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்று, புதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*22/2, குமாரசாமி வீதி,*
*கந்தர்மடம்.* (8538)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## தில்லையம்பலம் சிவசோதிலிங்கம்

(முன்னாள் இ.போ.ச. முகாமையாளர்)

அச்சுவேலி, தம்பாலையைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் சிவசோதிலிங்கம் நேற்றுமுன்தினம் (18.09.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் அகில்ஜோதி, அருள்ஜோதி, அமுதஜோதி, அருணஜோதி (ஆசிரியை, நவீஸ்ட் - கைதடி), கமலவேள் (சுவிஸ்), கமலராஜ், கமலசிறி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - நாகபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற விநாயகலிங்கம் மற்றும் ஆறுமுகநாதன், சந்திரலிங்கம், வல்லிபுரநாதன், விமலேஸ்வரி (சுவிஸ்), ரதிதேவி, மேரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (23.09.2002) திங்கட்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு இல 14, சென் ஜோன்ஸ் யோசேப் மாவத்த, எத்துக்கால, நீர்கொழும்பு என்னும் இடத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*24/3, யாழ்.இந்துக் கல்லூரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (8539)

தகவல்:-
சந்திரலிங்கம் (மருமகன்)

## திருமதி செல்லத்துரை அன்னம்மா

(தோண்டாவில், குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை அன்னம்மா நேற்று (19-09-2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் பொன்னம்பலம் (முன்னாள் ஊழியர், யாழ்.ப.நோ.கூ.சங்கம்), விருத்தாசலம் (ஓய்வுபெற்ற ஊழியர், இ.போ.சபை - கனடா), பரிபூரணம், தருமலிங்கம் (நல்லூர் ப.நோ.கூ.சங்கம்), பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் புஸ்பராணி, இராசேஸ்வரி, காலஞ்சென்ற குமாரசாமி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமியாரும் தவநேசினி பரமேஸ்வரன் (ஜேர்மனி), ரவிக்குமார் நளாயினி, சாந்தகுமார் (ஜேர்மனி), கலாநிதி, சுதர்சன், மோகன், சிந்துஜா, திலீபன் (கனடா), கோபி, நிலக்சன், துஷாணி, சுபானி, யோகராசா (கனடா) ஆகியோரின் பேர்த்தியும், அருணஜா, பிரணவன், பவித்திரா (ஜேர்மனி) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2002) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குமரகோட்டம்,*
*கோண்டாவில்.* (G/23897)

தகவல்:-
சி.தருமலிங்கம் (மகன்)

# திலீபனின் படம் தாங்கிய ஊர்திப் பவனி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.20

தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி குடாநாட்டில் சகல பகுதிகளுக்கும் பவனியாகச் செல்லவிருக்கின்றது.

நேற்றுமுன்தினம் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் இருந்து புறப்பட்ட ஊர்தி உடுப்பிட்டி, நெல்லியடி, பருத்தித்துறை, துன்னாலை, அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி ஆகிய பகுதிகளுக்குச் சென்றது.

நேற்று நீர்வேலியை அடைந்த ஊர்தி இன்று காலை 7.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு காலை 9 மணிக்கு கோப்பாய் சந்திக்கும், 10.30 மணிக்கு உரும்பிராய் சந்திக்கும், 11.30 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் சந்திக்கும், பிற்பகல் 1.00 மணிக்கு சுன்னாகம் சந்திக்கும், 3.30 மணிக்கு மருதனார்மடம் சந்திக்கும், மாலை 5.30 மணிக்கு சங்கானை பஸ்நிலையத்துக்கும் செல்லும். அங்கு இரவு கூட்டம் இடம்பெறும்.

ஊர்தி செல்லும் பாதைகளில் மக்கள் கூடிநின்று மலர்தூவி தமது அஞ்சலிகளைச் செலுத்திவருகின்றனர். நாளை காலை 8மணிக்கு சித்தங்கேணிச் சந்திக்கும், 10.30 மணிக்கு பண்டத்தரிப்புச் சந்திக்கும், 12.30 மணிக்கு மானிப்பாய் சந்திக்கும் பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் சந்திக்கும், மாலை 6மணிக்கு இருபாலைச் சந்திக்கும் ஊர்தி செல்லும். (ஐ-3)

## ஒத்திவைத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

25 ஆம் திகதி நடைபெறவிருப் பது குறித்து இருதரப்பினருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. சர்வதேச செஞ்சிலு வைச் சங்கம் இதற்கு உதவி புரியும்.

கைதிகள் பரிமாற்றம் வன்னியில் நடைபெறும். (ஐ-12)

# தென்னிந்திய திருச்சபை பேராயர் வருகிறார்

யாழ்ப்பாணம்,செப்.20

தென்னிந்தியத் திருச்சபையின் இந்தியத் தலைமைப் பேராயர் கலாநிதி கே.ஜே.சாமுவேல் ஒருவாரகால விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் 23ஆம் திகதி இலங்கை வருகிறார்.

பேராயர் கலாநிதி எஸ்ஜெபநேசன் எழுதிய 'அமெரிக்க மிசன்' பற்றிய வரலாற்று நூலை பேராயர் சாமுவேல் வெளியிட்டு வைப்பார்.

எதிர்வரும் 25ஆம் திகதி வட்டுக்கோட்டை பேராலயத்தில் இடம்பெறும் ஆதீன விழாவிலும் குருமார் அபிஷேக வைபவத்திலும் பேராயர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஐ-3)

# ஏழு கூட்டுறவுச் சங்கங்களுக்கான இயக்குநர் சபை விரைவில் தெரிவு

அரியாலை,செப்.20

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏழு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கான புதிய இயக்குநர் சபைகளைத் தெரிவுசெய்வதற்கான தேர்தலை எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்திற்குள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு - நயினாதீவு, வேலணை, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, நெடுந்தீவு, பச்சிலைப்பள்ளி, மருதங்கேணி ஆகிய ஏழு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்களுக்கே புதிய இயக்குநர் சபைகளைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இதேவேளை-

நெடுந்தீவு, பச்சிலைப்பள்ளி, மருதங்கேணி ஆகிய மூன்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர் சபைகளின் பதவிக்காலம் முடிவடைந்துள்ளது.

தற்போது இந்த ஏழு பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் புதிய இயக்குநர் சபைகளைத் தெரிவுசெய்வதற்கு அதற்குரிய தேர்தல் பணியை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)

# கணேசசர்மா ஞாபகார்த்த இசைக்கச்சேரி கொழும்பில்

யாழ்ப்பாணம்,செப்.20

மிருதங்க வித்துவான், மிருதங்க பூபதி, லயஞானமணி, கலாபூசணம் அ.கணேசசர்மாவின் முதலாவது ஆண்டு ஞாபகார்த்தமாக ஏற்பாடு செய்யப்பட்ட கர்நாடக இசைக் கச்சேரி நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 5.00மணிமுதல் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நெய்வேலி சந்தானகோபாலன் (பாட்டு), திருச்சூர் ரி.இராஜேந்திரன் (வயலின்), திருச்சூர் கே.எம்.எஸ். மணி (மிருதங்கம்) ஆகியோருடன் இலங்கைக் கலைஞர்கள் இணைந்து இந்த இசைக்கச்சேரியை நடத்துகின்றனர். (ஐ)

## திருத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம்.பௌசி, ரிச்சர்ட்பத்திரன, றொனி டி மெல் ஆகியோர் இந்தப் பிரேரணையை ஆதரிக்கப்போவதாக ஏற்கனவே அறிவித்திருந்தனர்.

அந்த முன்னணியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான மங்கள சமரவீரவும் இப்போது சட்டதிருத்தத்தை ஆதரிக்கப் போவதாகத் தெரிவித்தார்.

இதேவேளை -

இந்தப் பிரேரணை தோற்கடிக்கப படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## சைக்கிள் யாருடையது?

யாழ்.ப.நோ.கூ.சங்கத்தின் சைக்கிள் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஊழியர் ஒருவரின் சைக்கிள் தவறுதலாக மாறி எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாகவும் -

அதற்குப் பதிலாக ஹமாலை சைக்கிள் ஒன்று அங்கு கைவிடப்பட்டிருப்பதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. சைக்கிளை மாறி எடுத்தவர்கள் சங்க நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு சைக்கிளை ஒப்படைக்குமாறு சங்கத்தின் பொதுமுகாமையாளர் கேட்டிருக்கிறார். (ஐ-17)


சுந்தர் வெளியீடு

தரம் 5 புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள் 2003

முதலாவது வெளியீடு 06.10.2002 ஞாயிறு காலை 9.00மணி

நிறுவனங்கள், தபால் மூலம் பெறவிரும்புபவர்கள் 01.10.2002 இற்கு முன் விண்ணப்பிக்கவும்

விபரங்கள் அலுவலகத்தில்

844,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

IBMS IBMS IBMS IBMS IBMS

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

Diploma in Business Application. (DBA)

Ms Office உடன்

SLCDL பாடத்திட்டமும் உள்ளடக்கப்பட்டது.

Ms WORD
ஆரம்பம்:21/09/2002
SAT/ SUN 11.00 -1.00

Ms ACCESS
ஆரம்பம்:21/09/2002
SAT/SUN 7.00 - 9.00 a.m
3.00 - 5.00 p.m
TUE/THUR 9.00 - 11.00

701, k.k.s, Road, Jaffna.

IBMS IBMS IBMS IBMS IBMS

IPAS

இன்று (20.09.2002) 9.30 (புதியநேரம்) மணியளவில் சிலிங்கோ குறூப் நிறுவனத்தின் உயர்அதிகாரி ஒருவரால் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. (C/23894)

ஆரம்பமாகிறது! (கந்தர்மடம் சந்திக்கு அருகில்) கந்தபுராண வீதி.

இணைந்த கணிதம்

2003 A/L

சார்பு வேகம் (Fri, Sat, Sun 3.45 - 4.45)

2004 A/L

நிகழ்தகவு (Sat, Sun 4.45)

ஆரம்பம்: 21.09.2002

2002 A/L பரீட்சை எடுத்தவர்களுக்கான

Paper Class Sat, Sun (9.30 - 11.30) (a.m.)

தொகையிடு Tue, Wed, Fri 6.30 - 8.00 (p.m.) (புதிய நேரம்)

(மின் ஒளியில்)

P.செந்தில்நாதன் B.Sc.

(8380)

RAMCO CEMENT

ராம்கோ சிமெந்து

இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டது. உறுதியான, நீடித்து உழைக்கும் வானுயர்ந்த கட்டடங்களுக்கு கோபுர சின்னம் பொறித்த ராம்கோ RAMCO சிமெந்து.

யாழ்நகரில் ஏக விநியோகஸ்தர்கள்:

ஈஸ்வர பகவான் & கொம்பனி

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021-2350.

தேவையானோர் உடன் தொடர்புகொள்ளவும். முற்பதிவு செய்தோருக்கு விநியோகம் இலவசம்.

தரமிகு CEMENT RAMCO CEMENT

(C/23892)


## மரண அறிவித்தல்

### திருமதி சின்னப்பிள்ளை நற்குணசேகரம்

காரைநகர், மாப்பாண ஊரியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னப்பிள்ளை நற்குணசேகரம் அவர்கள் நேற்று (19.09.2002) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தி நற்குணசேகரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரராஜசேகரம் (முன்னாள் முகாமையாளர், இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை), மகேஸ்வரி, சிவபாதம் (முன்னாள் உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்), சிவஞானம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற முத்தையா மற்றும் செல்வலச்சுமி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சியாமளா, ஜெயசங்கர், வாசுகி, யசோதா, யசோதினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ராகுலன், விதிலன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2002) வெள்ளிக்கிழமை பி.ப 2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாப்பாண ஊரி,*
*காரைநகர்.*

தகவல்,
ந.சிவபாதம் (மகன்)

(C/23898)


BATA கபிலா காலணியகம் DSI

கொழும்பு விலையில்

பாட்டா, டி.எஸ்.ஐ., ரன்பா, சீப்பா உள்ளிட்ட வெளிநாட்டுப் பாதணி வகைகள் அனைத்தையும்

யாழ் நகரில் நீங்கள்

கொழும்பு விலையில்

பெற்றுக்கொள்ளலாம்.

என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றார்கள்.

கபிலா சூ பலஸ்

இல. 4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C-23869)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.09.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.